பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி03 வியாழக்கிழமை 17.05.2018 | கதிர் 192

வடக்குப் பாடசாலைகளில் நாளை துக்கம் அனுஷ்டிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 17

வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் நாளை வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண சபையின் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறும், அன்று முற்பகல் 11 மணிக்கு அனைத்துப் பாடசாலை

பக்கம் 14

மே 18 நினைவேந்தலை அனுஷ்டிப்பது தவறல்ல!

தமிழருக்கும் உணர்வுண்டு என்கிறார் அமைச்சர் ராஜித

யாழ்ப்பாணம், மே 17

"மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை எமது தமிழ் மக்களே அனுஷ்டிக்கின்றனர். இதில் எந்தத் தவறும் இல்லை. வடக்கு மக்களை வேறு பிரதேச மக்களாகப் பிரித்துப் பார்க்கக்கூடாது. அவர்களுக்கும் தமது உறவுகளின் இழப்புகள் தொடர்பில் உணர்வுகள் உண்டு."

- இவ்வாறு நேற்று அதிரடியாகக் கருத்து வெளியிட்டார் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ராஜித சேனாரத்ன.

பக்கம் 14

படகில் வந்த நால்வருக்கு பிணை

யாழ்ப்பாணம், மே 17

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகள் முகாமிலிருந்து சட்ட விரோதமாக முறையில் தாயகம் திரும்பிய சகோதரன், சகோதரி மற்றும் சகோ தரியின் பிள்ளைகள் இருவர் என 4 பேரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.

அவர்களைச் சட்ட விரோதமாக அழைத்து வந்த மாதக லைச் சேர்ந்த படகோட்டிகள் இருவரும் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்க

பக்கம் 03

தந்தையும் மகனும் சடலங்களாக மீட்பு!

பன்றிக்கு வைத்த மின்சார இணைப்பில் சிக்கினர்

வவுனியா, மே 17

வவுனியா, சூடுவெந்த புலவு குளத்துக்கு அருகிலிருந்து தந்தையும் மகனும் சடலமாக மீட்கப்பட்

பக்கம் 03

நினைவேந்தலில் பங்கேற்க பஸ் ஒழுங்குகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 17

நாளை நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் மக்கள் பங்கேற்பதற்கான பஸ் ஒழுங்குகள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ் வரனினால் நேற்று அறிவிக்கப்பட்டன.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்

பக்கம் 03

விவசாயியின் உயிரை பறித்தெடுத்த ஹன்டர்

வவுனியாவில் நேற்று அதிகாலை சோகம்

வவுனியா, மே 17

வவுனியாச் சந்தையில் விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொடுத்து விட்டு சைக்கிளில் வீடு திரும்பிய விவசாயி ஹன்டர் வாகனம் மோதிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வவுனியா தாண்டிக்

பக்கம் 14

தீபமேந்திய ஊர்திப் பவனி நல்லூரிலிருந்து புறப்பாடு

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வாரத்தில் தமிழினப் படுகொலையில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் வகையில்

பக்கம் 14

மன்னார் 'சதொச' வளாகத்தில் நேற்று மனித எலும்புகள் மீட்பு

அகழ்வுப் பணிகள் ஆரம்பம்

மன்னார், மே 17

மன்னார் 'சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் நேற்று இடம்பெற்ற அகழ்வுப் பணியின் போது மேலும் பல மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அந்த வளாகத்தில்

பக்கம் 14

ஆள்கொணர்வு மனுக்களை தள்ளுபடி செய்ய கோரிக்கை

சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று படை அதிகாரி சார்பில் ஆட்சேபனை

யாழ்ப்பாணம், மே 17

"நாவற்குழிப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் காலம் கடந்தவை. சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டும் 1996 ஆம் ஆண்டாகும். 22

பக்கம் 14

போர்க்குற்றங்களுக்கு மன்னிப்பு வேண்டும்

கொழும்பு, மே 17

போர்க்காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பாக எந்தவொரு போர் வீரருக்கு எதிராகவும், சட்ட நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்று தென் மாகாண

பக்கம் 14

இனிதாகசியம் அல்ல!

மீண்டும் ஒரே தேசமாக தமிழ் மக்கள் தங்களை நிலை நிறுத்துவதற்கு அருமையான ஒரு வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

நாம் வீழ்ந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே நாம் தமிழராய் மீள் எழுச்சி கொள்வதற்கு நேரம் கூடி வந்திருக்கின்றது; சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது.

பக்கம் 03

ஆள்கொணர்வு மனுதாரர்களுக்கு நீதிமன்ற வளவுக்குள் அச்சுறுத்தல்

மனுதாரர்களின் சட்டத்தரணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 17

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்துள்ள உறவினர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்

பக்கம் 03

வேலையற்ற பட்டதாரிகள் வவுனியாவில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்!

வவுனியா, மே 17

வவுனியா மாவட்ட செயலகத்தின் முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

35 வயதிற்கு மேற்பட்டவர்களை நியமனங்களில் உள்ளீர்க்க வேண்டும், 2017 வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் உள்வாங்குதல் வேண்டும், பட்ட சான்றிதழ் இறுதித் திகதியின் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்படுதல் வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்தும், வேலையற்ற பட்டதாரிகளால் கொழும்பில் நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு நீர் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்தும் வவுனியா மாவட்ட செயலத்திற்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 'நியமன இழுத்தடிப்பு மாகாணசபைத் தேர்தலுக்காகவா...?', 'வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எங்கே..?', '143 நாள் வீதியில் இருந்தோம்; 'எம் தலைவிதி மாறவில்லை', 'நியமனம் வழங்குவதை துரிதப்படுத்து', 'நல்லாட்சி என்ன மெல்லக் கொல்லும் விசமா..?', 'எமக்கே இந்நிலையாயின் எதிர்கால சந்ததியினருக்கு..?', 'பட்டதாரிகளை தெருவில் விட்ட நல்லாட்சி', 'பேச்சுவார்த்தை போதும் நியமனம் வழங்கு..', 'வெற்றிடங்கள் ஏராளம்; பட்டதாரிகள் வீதியோரம்.', 'பட்டதாரிகளின் மீது நீர்த்தாரைப் பிரயோகம் நியாயமானதா?' - போன்ற பல்வேறு கோசங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். (க - 100)

வடமாகாண தனியார் பஸ்கள் பணிப் பகிஸ்கரிப்பு தள்ளி வைப்பு!

வவுனியா, மே 17

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் வட பிராந்திய தனியார் பேருந்துகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளன என வட பிராந்திய தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் உப தலைவர் கே.ராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்-

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக எரிபொருள் விலையேற்றம் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்களால் இன்று (நேற்று) நள்ளிரவு முதல் பணிபுறக்கணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையால் எதிர்வரும் 18 ஆம் திகதி துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனால், வடக்கின் 5 மாவட்டங்களின் பொது மக்கள் அப்பகுதிக்கு சென்று வருவதை கருத்தில் கொண்டு வட பிராந்திய தனியார் பேருந்து சங்கம் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவு வரை வழமையான தமது சேவைகளை வழங்குவது என தீர்மானித்துள்ளனர்.

இதன்படி வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிற்கும் இடையேயான சேவைகளும், உள்ளூர் சேவைகளும் எதிர்வரும் 18 ஆம் திகதி வழமை போன்று நடைபெறும் என்று தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் 18 ஆம் திகதியும் தென்னிலங்கை தனியார் பேருந்துகளின் பணி பகிஷ் கரிப்பு தொடரும் பட்சத்தில் அவர்களோடு இணைந்து தனியார் பேருந்து உரிமையாளர்களின் கோரிக்கைக்கு வலுசேர்க்கும் முகமாக வடமாகாண எமது சங்கமும் போராட்டதில் இணைய உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(100)

வவுனியா விளக்கமறியல் சிறைக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி விஜயம்!



வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள பல்வேறான பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்வதற்காக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடமாகாணசபை உறுப்பினர் எம்.தியாகராஜா ஆகியோர் நேரடியாக சென்று நேற்று சிறைச்சாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் கைதிகளுக்கு எதிராக பல்வேறு அநீதிகள் இடம்பெறுகின்றன என அண்மையில் கைதி ஒருவர் வவுனியா நீதிமன்றத்தில் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதனையடுத்து கைதிகளிற்கு எதிராக இடம்பெறும் அநீதிகளை கண்டித்தும் சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் பாவனை நடைபெறுவதாகவும் கூறி சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து சில கைதிகளை அனுராதபுரம் சிறைச்சாலையில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட சிறைக் கைதிகள் நேற்று முன்தினம் உணவு தவிர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பாக ஆராயும் பொருட்டு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வடமாகாணசபை உறுப்பினர் எம்.தியாகராஜாவும் விளக்கமறியல் சிறைச்சாலைக்கு சென்றிருந்தனர்.

இதன் போது கைதிகளுடனும் சிறைச்சாலை அதிகாரிகளுடனும் அவர் கலந்துரையாடினர். இந்த நிலையில் வவுனியா சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் பாவனையுள்ளது எனக் கைதிகள் தெரிவித்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஊடகங்களிற்கு தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சிறைச்சாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடியமையின் அடிப்படையில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் 55 கைதிகளை மாத்திரமே தங்கவைக்க முடியும்.

இந்த நிலையில் சுமார் 258 பேரை தங்கவைக்கின்ற நிலைமை காரணமாக இடவசதியின்மை ஏற்பட்டமையால் சிறைக் கைதிகளை அனுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்று வதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தபோதும் அது நிறுத்தப்பட்டது என சிறைக்கைதிகள் தெரிவித்திருந்தனர் என்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (100)

காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன

கொழும்பு, மே 17

இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பின்னர் இலங்கைப் படையினரின் தடுப்புக் காவலில் இருந்த 29 சிறுவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச மனித உரிமை அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்காவை மையமாகக் கொண்ட சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் என்ற அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த தகவல் இடம்பெற்றுள்ளது என ஏ.பி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர், போரின் கடைசி நாளில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட 280 பேரின் பெயர் விவரங்களை இந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் பலரது விவரங்கள் படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில், 29 சிறுவர்கள் உள்ளடங்கியுள்ளனர். அவர்களில் பலரும் 5 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக்கு ஜப்பான் நிதி உதவி!

கொழும்பு, மே 17

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம் முப்பது கோடி ரூபாவை நிதியை வழங்கியுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தின் இரண்டாவது இறங்குதளத்தை அமைக்கவும் ஜப்பான் அரசு ஒத்துழைப்பு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொடுப்பனவை வழங்காவிட்டால் மே 28 முதல் தொடர் போராட்டம்

வடக்கு மருத்துவர்கள் எச்சரிக்கை

வைத்தியர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாத பட்சத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக வடமாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேக்கும் வடமாகாண அரச வைத்திய அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, வடமாகாண சபை அதிகாரிகளின் வினைத்திறனற்ற செயற்பாடுகளால் தாம் அதிருப்தி கொண்டுள்ளனர் எனவும், அதனால் வைத்தியர்கள் உட்பட பல அரச அலுவலர்கள் தமது நிலுவைகளைப் பெறப் பல ஆண்டுகளாகக் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் வைத்தியர் சங்கத்தினர் ஆளுநரிடம் எடுத்துக் கூறினர்.

இதனையடுத்து, ஆளுநர் இதற்குரிய நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்வார் எனத் தெரிவித்துள்ளார்.

உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாத பட்சத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் தொடர்வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக வடமாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-7)

13 வருட உத்தரவாத கல்வி முறைமை இன்று மானிப்பாய் இந்துவில் ஆரம்பம்

பதின்மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வித்திட்டத்தின் கீழ் மாணவர்களை அனுமதி நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ளது.

பதின்மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் உயர்தரத் தொழில் பாடத்துறையை கல்விப் பொது தராதரத்தில் சகல பிள்ளைகளுக்கும் உறுதிப்படுத்த கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. இவ் வேலைத்திட்டத்தினுள் இரண்டாம் கட்டமாக 137 பாடசாலைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. வலிகாமம் வலயத்தில் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இதை நடைமுறைப்படுத்தத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது இன்று அங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது என மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் க.பொ.த சாதரண தரப் பரீட்சையில் (டிசெ.2017) முழுமையாகச் சித்தியடையாத அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

மூன்று பாடத்துறைகளை ஒரு மாணவர் கற்க வேண்டும். அவையாவன:-

1.பொதுப்பாடத்துறை
2.பிரயோகப் பாடத்துறை
3. நிறுவனஞ்சார் தொழிற் பயிற்சி

தரம் 12 இல் பொதுப் பாடத்துறையும், பிரயோகப் பாடத்துறையும் கற்பிக்கப்படும். முதலாவது தவணையில் பொதுப் பாடத்துறையில் அடங்கும் ஒன்பது பாடங்களையும், இரண்டாம், மூன்றாம் தவணைகளில் பிரயோகப் பாடத்துறையில் அடங்கும் 26 பாடங்களில் விரும்பிய மூன்று பாடங்களையும் தெரிவுசெய்து கற்க வேண்டும்.

தரம் 13 இல் மேலே கற்ற மூன்றில் ஒரு பாடத்தைத் தெரிவுசெய்து கற்பதுடன் தொழிற்பயிற்சிக்காக கல்வியமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கற்றல் பயிற்சியினை மேற்கொ[illegible]ல் வேண்டும்.

இவையனைத்தும் பாடசாலை நேரத்தினுள் வழமையான பாடவேளைகள் (40 நிமிடம்) போலல்லாது, நெகிழ்ச்சி தன்மை கொண்டவையாக அமையும்.

இது தொடர்பான நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

கட்சி, அணி, பதவி நிலை எல்லாம் தாண்டி, ஒவ்வொருவரும் 'தமிழன்' என்ற இன உணர்வுடன் ஒழுங்கு சேர வேண்டும்.

அற்பப் பிரிவுகளையும், அபாண்டக் குற்றச்சாட்டுக்களையும் முன்னிறுத்துவதை விடுத்து, ஒன்றுபட்ட தேசமாய், எழுவோம். எமக்காகத் தங்களை ஆகுதியாக்கிய எமது போராளிகளையும், எமது மண்ணின் மைந்தர்களையும், மக்களையும் அஞ்சலிப்பதற்கு ஐக்கியப்பட்டு அணி திரள்வோம்.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமான குறையும், ஒவ்வொரு விதமான தவறும் இருக்கும். அவற்றைச் சுட்டிக்காட்டி, அவர்களின்றும் பிரிந்து தள்ளி நின்று, எம்மைச் சத்தியசீலர்களாகக் காட்டவேண்டிய தருணம் இது வல்ல.

தங்கள் மண்ணின் மறவர்களை அஞ்சலிக்க தமிழினம் ஒன்றுபட்டு ஒரு தேசமாக எழுந்தது என்பதைச் சர்வதேசத்துக்கும் காட்டுவதற்கான பொன்னான நேரம் இது.

பிளவுபட்டு, தனித்தனியாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுக்கக் கங்கணம் கட்டி நின்ற தரப்புக்கள் எல்லாம், ஒன்றுபட்டு நினைவேந்தலைச் செய்ய இணங்கி விட்டன என்ற செய்தி, தமிழினத்துக்குக் கிடைத்த வெற்றி.

துயருக்கு மத்தியிலும் துய்க்கத்தக்க ஐக்கிய எழுச்சி இது. இதற்காக விட்டுக் கொடுத்து, தங்களை மேன்மைப்படுத்திக் கொண்ட இளைஞர் சமுதாயம் பாராட்டுக்குரியது; மெச்சத்தக்கது. ஐக்கிய எழுச்சிக்காய் விஞ்சத்தக்க வகையில் உறுதியுடன் நின்ற மாகாண முதல்வரும் பாராட்டுக்குரியவர்.

கடந்த வருடம் நினைவேந்தல் நிகழ்ச்சியில் பங்குபற்றி அரசியல் தலைவர்களை ஏளனப்படுத்துகின்றமை போல நடந்து கொண்டு, அந்த நினைவேந்தலையே கொச்சைப்படுத்திய நிலைமை இம்முறை வேண்டாம்.

எதிர்க்கட்சித்தலைவரிலிருந்து, எமது எம்.பிக்கள், மாகாண முதல்வர், மாகாண எதிர்க்கட்சித் தலைவர், மாகாணசபை உறுப்பினர்கள், மேயர் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள், பல கட்சிகளினதும் தலைவர்கள் என எல்லோரும் வரட்டும்; பிரசன்னமாகி அஞ்சலிசெலுத்தட்டும். – ஆனால் தத்தமது பதவி நிலைகளை, அந்தஸ்தைத் துறந்து தனித் தமிழனாக ஒவ்வொருவரும் வரவேண்டும். பக்கத்தில் வருபவன் தமிழ்த் தேசத்தின் ஐக்கிய எழுச்சியை உலகிற்குப் பறைசாற்றவரும் சகோதரத் தமிழனாக இருக்கட்டும். எந்தக் கட்சியை – எந்த அணியை – எந்தத் தரப்பை – எந்தப் பிரிவைச் சார்ந்தவன் என்று நோக்காத வகையில் தமிழனாக வரவேண்டும்.

–நாளைய முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை தமிழரின் பேரெழுச்சியாக வரலாறு சொல்ல வேண்டும். அதற்கான சிந்தனையே இன்றைய இப்பத்தியின் விடயமாக அமைகின்றது.

-மின்னல்-

நினைவேந்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளவை வருமாறு:

யாழ்ப்பாணம்

அனைத்து பஸ்களும் காலை 7.30 மணியளவில் முள்ளிவாய்க்காலுக்குப் புறப்படும்.

1. காரைநகரில் இருந்து ஒரு பஸ் சுழிபுரம் ஊடாக சங்கானை சண்டிலிப்பாய், மானிப்பாய் வழியே முள்ளிவாய்க்கால் செல்லும்.

2.கட்டைக்காட்டில் இருந்து (வடமராட்சிகிழக்கு) மருதங்கேணி ஊடாக ஒரு பஸ் முள்ளிவாய்க்கால் செல்லும்.

3. அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து ஒரு பஸ் புறப்பட்டு கோப்பாய் கைதடி வழியே முள்ளிவாய்க்கால் சென்றடையும்.

4.தொண்டமனாற்றுச் சந்தியில் இருந்து ஒரு பஸ் புறப்பட்டு வல்வெட்டித்துறை, பருத்தித்துறை நெல்லியடி ஊடாகப் புதுக்காடு சென்று முள்ளிவாய்க்கால் சென்றடையும்.

5.யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இருந்து 02 பஸ்கள் முள்ளிவாய்க்காலை நோக்கிப் புறப்படுவன.

வவுனியா

1.செட்டிக்குளம் பிரதேச சபை முன்னால் இருந்து காலை 8.30 மணிக்கு ஒரு பஸ் முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

2.வவுனியா பஸ் நிலையத்தில் இருந்து மூன்று பஸ்கள் காலை எட்டு முப்பது மணிக்கு முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

மன்னார்

1.அடம்பனில் இருந்து காலை ஏழு மணிக்கு முள்ளிவாய்க்கால் நோக்கி பஸ் ஒன்று புறப்படும்.

2.தலைமன்னாரில் இருந்து பஸ் ஒன்று காலை ஏழு மணிக்கு புறப்பட்டு பேசாலை, தாழ்வுபாடு ஊடாக முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

3.கீரியில் இருந்து காலை ஏழு மணிக்குப் புறப்படும் பஸ் ஒன்று எழுத்தூர், மன்னார் வழியாக முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

4.நானாட்டான் சந்தியில் இருந்து காலை ஏழு மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

5.மடுவில் இருந்து காலை ஏழு மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

கிளிநொச்சி

1.கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து இரண்டு பஸ்கள் ஒன்பது மணிக்கு முள்ளிவாய்க்கால் நோக்கிப் பயணிக்கும்.

2.கந்தசாமி கோயிலடியில் இருந்து ஒன்பது மணிக்கு ஒரு பஸ் முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

3.பரந்தன் சந்தியில் இருந்து காலை ஒன்பது மணிக்கு ஒரு பஸ் புறப்படும்.

முல்லைத்தீவு

1.தேவிபுரம் சந்தியில் இருந்து காலை ஒன்பது மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

2.உடையார்கட்டு சந்தியில் இருந்து காலை ஒன்பது மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

3.புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து காலை ஒன்பது மணிக்கு பஸ்கள் இரண்டு முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

4.விசுவமடு சந்தியில் இருந்து காலை ஒன்பது மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

5.துணுக்காய் பஸ் நிலையத்தில் இருந்து காலை 8.30 மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

6.ஒட்டுசுட்டான் சந்தியில் இருந்து காலை ஒன்பது மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

7.கொக்கிளாயில் இருந்து காலை ஒன்பது மணிக்கு பஸ் ஒன்று முள்ளிவாய்க்கால் நோக்கிப் புறப்படும்.

8.முல்லைத்தீவு நகரில் இருந்து இரண்டு பஸ்கள் முள்ளிவாய்க்கால் நோக்கிக் காலை ஒன்பது மணி தொடக்கம் பகல் 11 மணி வரை தொடர்ச்சியாக பஸ் சேவைகளை நடத்தும்

அனைத்து மாவட்டங்களிலும் இருந்த வரும் மக்கள் அவர்கள் வந்த அதே பஸ்ஸில் திரும்பிச் செல்லவேண்டும். வேறுவாகனங்களை நாடாமல் வந்த வாகனத்தையே அடையாளம் வைத்து பயணிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். என்றுள்ளது. (ஐ)

படகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறியலில் வைக்கப்பட்டனர்.

தமிழகத்திலிருந்து சட்டவிரோதமாகத் தாயகம் திரும்பிய குழந்தைகள் உட்பட நால்வரைக் காங்கேசன்துறைக்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து நேற்று அதிகாலை கடற்படையினர் கைது செய்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த சகோதரன், சகோதரி மற்றும் சகோதரியின் பிள்ளைகள் ஆகிய நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். 2006 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் காரணமாகக் கடல் வழியாகத் தமிழகம் சென்ற இவர்கள் கடந்த பன்னிரெண்டு வருடங்களாகத் தமிழக அகதிமுகாமில் வசித்து வந்துள்ளனர்.

அகதி முகாமில் போதிய வசதிகள் இன்மை மற்றும் பிள்ளைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ் பெறுவதிலுள்ள இடர்பாடுகளால் இவர்கள் கடல் வழியாகச் சட்டவிரோமான முறையில் நாடு திரும்பினர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

6 பேரும் விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர்.

அவர்களின் தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய 2 குழந்தைகள் உட்பட நால்வரையும் பிணையில் விடுவித்த நீதிவான் கருணாகரன், படகோட்டிகள் இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-7)

ஆள்கொணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவர்கள் நடந்து கொண்டனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு நாவற்குழிப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாம் அதிகாரியினால் கைது செய்யப்பட்டுப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 24 இளைஞர்கள் தொடர்பிலான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணை நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது மனுதாரர்கள் மேல் நீதிமன்றில் இருந்தபோது நீதிமன்றச் சூழலில் பெருமளவான இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பிரசன்னமாகி இருந்தனர்.

வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் மனுதாரர்கள் மற்றும் அவர்கள் உறவினர்கள் நீதிமன்றுக்கு வெளியில் வந்தபோது, புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டனர்.

அதனால் அச்சத்துக்கு உள்ளான மனுதாரர்கள் அது தொடர்பில் தமது சட்டத்தரணிகளுக்கு அறிவித்தனர். பின்னர் அச்சுறுத்தல் காரணமாக நீண்ட நேரமாக மனுதாரர்கள் நீதிமன்ற வளாகத்தைவிட்டு வெளியேறவில்லை.

நீண்ட நேரத்தின் பின்னர் இராணுவப் புலனாய்வாளர்கள் நீதிமன்ற வளாகத்தைவிட்டு வெளியேறி , யாழ்.பொலிஸ் தலைமையகத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினருக்குச் சொந்தமான இரு ஜீப் ரக வாகனங்களில் ஏறிச் சென்றனர்.

இராணுவப் புலனாய்வாளர்கள் நீதிமன்ற வளாகத்தை விட்டு வெளியேறிச் சென்ற பின்னரே மனுதாரர்கள் நீதிமன்றை விட்டு வெளியேறினார்கள்.

அதன்போது , மனுதாரர்களிடம் ஊடகவியலாளர்கள் கருத்துக் கேட்க முற்பட்டபோது , அச்சம் காரணமாகத் தாம் கருத்துக் கூற விரும்பவில்லை என அவர்கள் கூறிச் சென்றனர்.

இதேவேளை, நேற்றைய வழக்கு விசாரணையின்போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர, நீண்ட காலத் தாமதத்திற்குப் பின்னர் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் அதனைத் தள்ளுபடி செய்யவேண்டும் எனக் கோரி இருந்தார்.

அதன்போது , நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்டு இருந்த சூழ்நிலை காரணமாக [illegible]ச்ச நிலைமையால் தான் மனு தாக்கல் செய்யவில்லை. தற்போதைய நிலையில் அதனைத் தாக்கல் செய்துள்ளோம். மனுதாரர்கள் அச்சம் காரணமாக மனுத் தாக்கல் செய்யப் பின்நின்ற போதிலும் அந்த மனு மீதான விசாரணையை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மேற்கொள்ளவுள்ளார் என்னும் நம்பிக்கையில்தான் தற்போது மனுத் தாக்கல் செய்ய முன்வந்தார்கள் என மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (ஐ)

தந்தையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்லது.

இருவரது சடலங்களும் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா உலுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூடுவெந்த புலவு குளத்திற்கு நேற்று முன் தினம் மீன்பிடிக்கச் சென்ற சமயத்தில் அங்கு பன்றிக்குச் சட்டவிரோதமாக வைக்கப்பட்டிருந்த மின்சாரம் தாக்கித் தந்தையும் மகனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அதே பகுதியைச் சேர்ந்த சாகில் முகமட் முஸ்தப்பா (வயது – 48), அவரது மகனான முஸ்[illegible]ப்பா முகமட் ரயாஸ் (வயது– 15) என அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா குற்றத் தடயவியல் பொலிஸாருடன் இணைந்து உலுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

குளத்திற்கு அருகே காணப்பட்ட மின்சாரக் கம்பியிலிருந்து மின்சாரம் பெறப்பட்டமைக்கான தடயங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

சூக்கா கூறும் பரிந்துரைகள்

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் வலிந்து காணாமலாக்கப் பட்ட நமது உறவுகள் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் சில முக்கிய தகவல்களை – வழிகாட்டல்களை – பரிந்துரைகளை – முன்வைத்திருக்கின்றார் 'உண்மை மற்றும் நீதிக்கான சர் வதேச செயற்றிட்டத்தின்' நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ் மின் சூக்கா.

மனித உரிமைகள் சட்டத்தரணியான சூக்கா அம்மையார் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் விடயத்தில் அதிக தகவல்களையும் பரிச்சயத்தையும் கொண்டவர். தென் னாபிரிக்காவின் உண்மை, நல்லிணக்க ஆணைக் குழு மற் றும் எியாரோ லியோனின் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றில் அங்கம் வகித்தவர். அதனால் உண்மையான – சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய – நியாயமான – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய – நல்லிணக்கம் ஏற்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை நன்கு புரிந்து கொண்ட சர்வதேச வல்லாளர் அவர் எனலாம்.

இலங்கையில் பொறுப்புக் கூறல் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகளை நடத்தித் தமக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற் காக அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனி னால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவில் இவரும் ஒருவர். அத னால் இலங்கையில் போரின் இறுதிக்கட்டத்தின்போது மோச மாக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் போன்றவை எல்லாம் குறித்து நன்கு அறிந்த – தேர்ந்த – ஒரு மனித உரிமை நிபுணர் அவர் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள் ளப்பட்டது.

அத்தகைய ஓர் அனுபவசாலி – நிபுணர் – இலங்கையில் பொறுப்புக் கூறல் தொடர்பாக ஒரு முக்கிய கருத்தை முன்வைத் திருக்கின்றார்.

இலங்கையில் தமிழர்களுக்கு நீதி இன்னும் முற்றாக மறுக்கப்பட்டு விடவில்லை. அதனைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னமும் வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் உள்ளன.

இலங்கைத் தமிழர்கள் தமக்கு நியாயம் வேண்டி, இலங்கை அரசின் பொறுப்புக் கூறல் கடப்பாட்டை வற்புறுத்தி நடைமுறைப் படுத்தச் செய்வதற்கு சர்வதேச நீதிமன்றத்தின் கதவுகளை யும் தட்டலாம் என்ற உறுதியான செய்தியை அவர் வெளி யிட்டிருக்கின்றார்.

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத் தில் நீதி செய்வதற்கு மறுத்து, பொறுப்புக் கூறல் கடப்பாட்டை நிறைவு செய்யாமல் பின்னடித்து வருகின்றது அரசு. அவ் விடயம் தொடர்பில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் காணா மல் போனோர் அலுவலகம் காத்திரமாகச் செயற்பட வேண்டும். செயற்படாவிட்டால் இலங்கைத் தமிழர்கள் தமக்கு இழைக் கப்பட்ட அநீதிக்கு நியாயம் வேண்டி சர்வதேச நீதிமன்றத்திடம் செல்லமுடியும், செல்ல வேண்டும் என்பதே சூக்கா அம்மை யாரின் பரிந்துரை.

சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்வது என்பது வெறும் அரசியல் கோஷம், அது சாத்தியமற்றது என்ற சாரப்பட குறிப் பிட்டு அந்தப் பாதையையே அடித்து மூடும் வகையில் கருத்து வெளியிட்டு வரும் நமது அரசியலாளர்கள் இவ்விடயத்தில் கைதேர்ந்தவரான சூக்கா அம்மையாரின் கருத்தையும், நிலைப்பாட்டையும் கவனத்தில் எடுப்பது அவசியமானது.

அதேசமயம் –

இவ்விடயத்தில் நாங்கள் – தமிழர் தரப்பு – தவறாது செய்ய வேண்டிய – அத்தியாவசியமாக நிறைவேற்ற வேண்டிய – சில கடப்பாடுகளையும் அவர் கோடி காட்டியிருக்கின்றார்.

★ யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்தும், பிற வழிகளிலும் காணாமற்போனோரின் பூரணப்படுத்தப்பட்ட பட்டியல் அடங்கிய ஆவணத்தைத் தயாரித்தல்

★ காணாமல்போனோர் தொடர்பான ஆவணங்கள், சாட்சியங்கள், ஆதாரங்களை முன்வைக்கக்கூடிய உறவினர் கள், சாட்சிகள், நபர்கள் போன்றோரின் விவரப்பதிவுகள்.

★ காலப்போக்கில் முக்கிய சாட்சிகள் இறந்து விடலாம் என்பதால் அவர்களின் சட்டரீதியான சாட்சியங்கள், நேர் காணல்கள் போன்றவற்றை பின்னர் சட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய விதத்தில் பதிவு செய்தலும், ஆவணப் படுத்தலும்.

– இந்த விடயங்களை எல்லோரும் இணைந்து செயற் படுவதன் மூலமே நிறைவேற்றலாம் என்று சூக்கா அம்மை யார் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெறுமனே நமது அரசியல் தலைமைகளால் மட்டும் தனித்து நிறைவேற்றக் கூடிய விடயங்கள் அல்ல அவை. இப்பணியை நிறைவு செய்வதற்காக நமது தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். அரச நிர் வாகங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளின் தமிழ் அரசியல் தலைமைகள் பங்குபற்ற வேண்டும். இவை யாவற்றுக்கும் அப்பால் புலம்பெயர்ந்த தேசங்களில் இருக்கும் நம்மக்களின் பங்களிப்பும் இதற்கு முக்கியம்.

நாம் அனைவரும் ஒன்றுபட்டு இதனைச் செய்வோமா? செய்தால் வலிந்து காணாமலாக்கப்பட்ட நம் உறவுகளுக் கான நீதியைத் தேடுவதில் உண்மையாக உழைத்தவர்களா வோம்!

பேரவலம் சுமக்கும் மே மாதத்தில் அரசியல் கைதிகளை விடுவியுங்கள்!

ஜனநாயகப் போராளிகள் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 17

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் வலியையும், துயரையும் தமிழ் மக்கள் சுமந்து நிற்கின்ற இந்த மே மாதத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் உடனடி யாக விடுதலை செய்யவேண்டும் என்று ஜனநாய கப் போராளிகள் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடக வியலாளர் மாநாடு நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது கட்சியின் ஊடகப் பேச் சாளர் துளசி இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ் அரசியல் கட்சிகளின் விடுதலை தொடர் பான விவகாரம் இந்தக் காலத்தில் அதிக கூடு பிடித்து காணப்படுகின்றது. தமிழீழ விடுதலை போராட்டத் தில் ஒட்டுமொத்த தமிழினமுமே பங்கெடுத்து இருந்தது என்பதுதான் உண்மை. அப்படியிருக்க அந்த விடுதலை போராட்டத்தின் பெயரால் சில நூற்றுக் கணக்கானோர் சிறைச்சாலைகளில் தொடர்ச்சியாக அடைத்து வைக்கப்பட்டு இருப்பது அநீதியும், இயற்கை நீதிக்குப் புறம்பான விடயமும் ஆகும்.

அதே நேரத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத் தில் ஈடுபட்ட பல்லாயிரக்கணக்கான இளையோர் கள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்தில் கலக்க விடப்பட்டு உள்ளனர். இவர்கள் சமூ விரோத குற்ற செயல்களிலோ, வன்முறை நடவடிக்கைகளிலோ ஈடுபடாமல் வன்முறை அற்ற அமைதியான வாழ்க் கையில் ஈடுபட்டு உள்ளார்கள்.

நல்லாட்சி அரசைக் கொண்டு வந்ததிலும், அதைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வைத்திருக்கச் செய்வதிலும் தமிழர் தரப்பின் பங்களிப்பு மிக காத் திரமானதாக உள்ளது.

இந்நாட்டுச் சட்டத்தின் பிரகாரம் பொதுமன்னிப்பு வழங்குகின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. எனவே நல்லாட்சியின் நாயகரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் அரசியல் கைதி அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கி தமிழர் தரப்புக்கு நன்றியையும், நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியுடன் ஒன் றித்து செயற்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் வலியையும், துயரையும் தமிழ் மக் கள் சுமந்து நிற்கின்ற இந்த மே மாதத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பத்துக்கான நீதியை ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து வழங்குதல் வேண்டும் – என்றார். (ஐ)

சர்ச்சையில் சிக்கும் ரணில்!

பிரதமர் ரணில் விக்ரமசிங்க வின் உள்ளூர் விஜயங்கள் தொடர் பில் சிங்கள ஊடகமொன்று சர்ச்சைக்குரிய தகவலொன்றை வெளியிட்டுள்ளது.

அவர் கடந்த 3 வருடங்களில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மாத்திரம் அரச நிதியைப் பயன்படுத்திப் பயணம் மேற்கொண்டுள்ளார் என அந்தத் தகவலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த 3 வருடங்களில் விமா னப் படைக்குச் சொந்தமான ஹெலிக் கொப்டரைப் பயன் படுத்தி 64 விஜயங்களைப் பிரத மர் ரணில் விக்கிரமசிங்க மேற் கொண்டுள்ளார்.

மாத்தறை, தெனியாய சென்ற 64 முறையும் அவர் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பெல்- 414 ரக ஹெலிகொப்ட ரிலேயே பயணித்துள்ளதாக அலரிமாளிகையின் சிரேஷ்ட பேச் சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இந்தக் காலப்பகுதியினுள் நாட்டின் ஏனைய பிரதேச தேர்தல் பிரிவு களுக்கு இத்தனை முறை விஜயம் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனது கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் கொழும்பு மாவட்டத்தின் தேர்தல் பிரிவிற்கு அல்லது விசேடமாகத் தான் பிரதி நிதித்துவப்படுத்தும் மத்திய கொழும்பு தொகுதிக்கு 10 முறை கூட விஜயம் மேற்கொண்ட தில்லை என சிரேஷ்ட கட்சித் தலை வர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அது மாத்திரமல்ல பிரதமராக ரணில் விக்ரமசிங்க இதுவரை யில் விஜயம் மேற்கொள்ளாத பல தேர்தல் பிரிவுகள் உள்ளமையு டன், அவரின் தேர்தல் தொகுதி அல்லாத மாத்தறை தேர்தல் தொகுதிக்கு அவரின் இந்த விஜ யங்கள் அமைந்துள்ளன.

பிரதமரின் பயணம் குறித்து கொழும்பு அரசியல் மட்டத்தில் பல்வேறு நபர்கள் பலவிதமான முறையில் பேசி வருகின்றனர்.

ஏற்கனவே பல்வேறு விவ காரங்களில் பிரதமர் சிக்கியுள்ள நிலையில் புதிய நெருக்கடிக்கு அவர் முகம் கொடுக்க நேரிட் டுள்ளதாகவும் அந்த ஊடகம் சுட் டிக்காட்டியுள்ளது. (ஐ)

பஸ் கட்டணம் 6.56 சதவீதம் அதிகரிக்க அரசு அனுமதி

பஸ்சேவைகளின் கட்டணத்தை 6.56 சதவீதத்தால் அதிகரிக்க அமைச்சரை ஒப்புதல் வழங்கி யுள்ளது. இந்த அதிகரிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது என அமைச்சர் ரஞ்சித் மத்தும் பண்டார தெரிவித்தார்.

எனினும் ஆகக் குறைந்த கட்டணத்தில் மாற்றமில்லை என அவர் குறிப்பிட்டார். (ஐ)

ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச அனுமதி கோரும் மருத்துவர்கள்

கொழும்பு, மே 17

நாடளாவிய ரீதியிலான பணிப் புறக்கணிப்புக்கு முன்னதாகச் சந்திப்பு ஒன்றுக்கு வாய்ப்பைத் தருமாறு அரச மருத்துவ அதி காரிகள் சங்கம், ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவிடம் கோரி யுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செய லாளர் ஹரித்த அலுத்கேவினால் இந்தக் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

சிங்கப்பூருடன் செய்துகொள் ளப்பட்ட உடன்படிக்கையின் மூலம் நாட்டின் தலைவிதியை வெளி நாட்டவர்கள் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் அமைச்சரவைக்கும் உரிய முறையில் விளக்கமளிக் கப்படவில்லை என்றும் மருத்துவர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த நிலையில், இது தொடர் பில் ஜனாதிபதியைச் சந்தித்து நிலைமையை விளக்க அந்தச் சங்கம் அனுமதி கோரியுள்ளது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி தலையிடாவிட்டால், தொடர் பணிப்புறக்கணிப்பை மேற் கொள்ளப் போவதாகச் செயலா ளர் ஹரித்த அலுத்கே எச்சரித் துள்ளார். (ஐ)

கீத் நொயார் கடத்தல்:

சபாநாயகர் ஜயசூரியவிடமும் வாக்குமூலம் பெற்றது சி.ஐ.டி.

கொழும்பு, மே 17

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சபாநாயகர் கரு ஜய சூரியவிடம் நேற்று முன்தினம் காலை வாக்குமூலம் பெறப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நாடாளுமன்றக் கட்டடத் தொகு திக்குச் சென்று சபாநாயகரி டம் வாக்குமூலம் பெற்றனர்.

ஊடகவியலாளர் கீத் நோயார் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டபோது, கரு ஜயசூரிய பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச் சராகப் பதவி வகித்தார்.

இந்த நிலையில் அந்தச் சம் பவம் தொடர்பில் அவர் ஜனாதி பதிக்கும் அறிவித்திருந்தார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவுக் குச் சம்பவம் குறித்து என்ன தெரி யும்? – என்றே நேற்று அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

மூத்த ஊடகவியலாளர் கீத் நோயாரைக் கடத்திச் சென்ற கும் பல் ஒன்று அவர் மீது தாக்குதல் நடத்தியிருந்தது. இந்தச் சம்பவம் 2008ஆம் ஆண்டு நடைபெற் றது. (ஐ)

நாளை

18.05.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.ப. 7.51
திதி: துதியை பி.ப. 2.17
சுபநேரம்: 05.53 – 07.23 வரை
இராகுகாலம்: 10.23 – 11.53 வரை

கிராம உத்தியோகத்தர்கள் நியமனம் எதிர்வரும் வாரங்களில் பூர்த்தியாகும்

கொழும்பு, மே 17

கிராம உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும் பணி எதிர்வரும் சில வாரங்களில் பூர்த்தி செய்யப்படும் என்று உள் நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் போட்டிப் பரீட்சை இடம்பெற்றது.

இதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெற்றது.

இது தொடர்பான புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தகுதியைப் பூர்த்தி செய்த பரீட்சார்த்திகளுள் ஆயிரத்து 730 பேர் நியமனத்திற்காகத் தெரிவாகியுள்ளனர்.

இது தொடர்பான தகவல்கள் மார்ச் மாதம் 23 ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களத்தால் உள் நாட்டலுவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான கடிதங்களை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் சில வாரங்களில் இடம்பெறும்.

14 ஆயிரத்து 22 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் இரண்டாயிரம் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றத்தில் அரசியல் அழுத்தங்கள் இல்லை!

அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டார தெரிவிப்பு

பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பில் அரசியல் வாதிகள்சிலர் அழுத்தம் கொடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை நான் நிராகரிக்கிறேன் எனப் பொது நிர்வாக முகாமைத்துவம் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.-

பொலிஸ் பதவி உயர்வு, ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்றம் தொடர்பில் தெளிவான வழிமுறை ஒன்று தற்போது முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ் சீர்த்திருத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யத் தனியான ஒரு குழுவை நியமித்து அவர்களின் மூலம் பெறப்படும் அறிக்கைகளைக் கொண்டு யாருக்கும் அநீதி ஏற்படாத விதத்தில் பொலிஸ் இடமாற்றங்களை மேற்கொள்ளப்படுகிறது.

பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பில் பல்வேறு விதத்தில் அழுத்தங்கள் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை நான் முழுமையாக நிராக்கிறேன்.

பொலிஸில் உள்ள அனைத்துக் குறைப்பாடுகளையும் விரைவில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

சேதன – அசேதனப் பசளை தொடர்பில்

விவசாய அமைச்சால் விவசாயிகளுக்கு பயிற்சி!

கொழும்பு, மே 17

விவசாய அமைச்சின் விவசாய ஊக்குவிப்பு விசேட செயற்றிட்டமான 'ஒன்றாய் எழுவோம் இச்சிறுபோகத்தை வெல்வோம்' என்ற திட்டம் தற்பொழுது நடாளவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இது தொடர்பிலான விழிப்புணர்வு திட்டத்தின் ஆரம்ப வைபவம் காரைதீவு நிந்தவூப் பிரதேச உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி அழகு மலர் ரவீந்திரன் தலைமையில் மாகாணவிவசாயத்திணைக்களத்தின் நிந்தவூர் வலயத்துக்குட்பட்ட பகுதியில் நடைபெற்றது.

இதன்போது, ஆரம்ப மழையுடன் சிபார்சு செய்யப்பட்ட குறுகிய கால நெல்லினங்களைப் பயிரிடுவதுடன், உரிய சேதன மற்றும் அசேதனப் பசளைகளையும் பாவித்து விதைப்பிலீடுபட ஊக்குவிக்கும் செயற்றிட்டம் ஒன்றை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியது.

இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக விவசாய அமைச்சின் வெளிக்கள உத்தியோகத்தரால் விவசாயிகளுக்குப் பயிற்சியுடன் விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வைக்கோலைப்பாவித்து கூட்டெரு தயாரிக்கும் முறையைச் செய்முறைப் பயிற்சியினூடாக விவசாயிகளுக்குத் திணைக்கள அலுவலர்கள் இதன்போது தெளிவுபடுத்தினர்.

சிகரெட்டுகளுடன் பெண் கைது!

கொழும்பு, மே 17

வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனச் சுங்க பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிங்கப்பூரிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை இலங்கை வந்த இந்தப் பெண் சுமார் 77 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுக்களை தனது கைப்பையில் மறைத்து வைத்துக் கடத்த முயற்சித்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

திவுலப்பிட்டியைச் சேர்ந்த 35 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா திருட்டுச் சம்பவம்; ஐவர் பொலிஸாரால் கைது

வவுனியா, கல்மடு சாளம்பன் பகுதியில் இடம்பெற்ற திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஐவரை வவுனியாப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்து நீதி மன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி வவுனியா கல்மடு சாளம்பன் பிரதேசத்தில் வீடு ஒன்றில் அதிகாலை வேளையில் புகுந்த சிலர் 20 லட்சம் பெறுமதியான நகை மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றைத் திருடிச் சென்றிருந்தனர்.

இது தொடர்பில் வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர் தென்னக்கோனின் வழிகாட்டலில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோ ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் பிராந்திய தீர்க்கப்படாத குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில், இந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மன்னார் பகுதியைச் சேர்ந்த 3 முஸ்லிம் இளைஞர்கள், திருகோணமலை மற்றும் வவுனியாவை சேர்ந்த ஒவ்வொருவர் உள்ளிட்ட ஐவரைக்கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இவர்கள் மீது முன்னரும் பல குற்றசாட்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (க-100)

வெங்காயம், உருளைக்கிழங்கு உற்பத்தியாளரை பாதுகாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு!

கொழும்பு, மே 17

வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென இராஜாங்க அமைச்சர் மகிந்த அலுவிஹாரதலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சின் அதிகாரிகள் குழுவில் இடம்பெறுகிறார்கள்.

மேலும், இலங்கையில் உருளைக்கிழங்கு, வெங்காய உற்பத்தி என்பனவற்றில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான முறையான வேலைத்திட்டத்தைத் தயாரிப்

பது காலத்தின் தேவை என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாத்தளை, யாழ்ப்பாணம், புத்தளம் போன்ற இடங்களில் வெங்காயம் பயிரிடப்படுவதோடு, பண்டாரவளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைக்காமையினால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்கிறார்கள்.

வெங்காயம், உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களை வியாபாரிகளின் சுரண்டலிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

அறுவடைக் காலங்களில் இறக்குமதிசெய்யப்படும் உருளைக்கிழங்கு, வெங்காயம் என்பவைற்றின் இறக்குமதியைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதோ, வரியை அதிகரிப்பதோ அவசியமாகும் என்றும் விவசாய அமைச்சரும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

யாழ் பிரதேசத்தில் -

மணற்காடு, வசிக்கண்டி, குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, அப்பன் ஆகிய இடங்களிலும் -

வவுனியா பிரதேசத்தில் -

கொக்கெலியவிலிருந்து ஓமந்தை வரை, ஓமந்தை வீட்டுத்திட்டம், ICT கல்லூரி, Union Alliance Ltd, AMP ஓமந்தை, ஓமந்தை மீன் பிடிவலைத் தொழிற்சாலை, சாந்தசேனா, குடாக்கச்சகொடிய, மகாமயிலங்குளம், துட்டுவாகை, குடாக்கச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

திறந்த பல்கலை பட்ட மேற்கல்வி

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் 2017/2018 ஆம் ஆண்டுக்குரிய விசேட தேவைகள் சார் பட்ட மேற்கல்விடிப்ளோமாகற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வியலாளர் சேவை மற்றும் விரிவுரையாளர்கள் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கவிரும்பும்விண்ணப்பதாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 19.06.2018 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

தினசரி ராசி பலன் (17.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித்திங்கள் 3 ஆம் நாள் வியாழக்கிழமை துவிதீயைத்திதி பகல்11.27 மணி வரை பின்னர் திரிதீயை. நட்சத்திரம்: ரோகினி காலை 6.48 மணி வரை பின்னர் மிருகசீரிடம் பி.இ. 4.33 மணி வரை பின்னர் திருவாதிரை மரணயோகம்.

ராகுகாலம் - பகல் 01.40 மணி முதல் 3.14 மணி வரை.
சுபநேரம் - காலை 7.22 மணி முதல் 8.52 மணி வரை.
திவசம் செய்ய வேண்டிய திதி - வைகாசி மாத வளர்பிறை திரிதீயை.
பிறந்த நட்சத்திர வழிபாடு - மிருகசீரிடம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி

மேஷம் - யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த தன லாபம் கிடைக்கும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

ரிஷபம் - உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் மதிக்கப்படுவார்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்தை மாற்றி புது மனை வாங்குவார்கள்.

மிதுனம் - யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சலசலப்பு உண்டாகும். உறவினருடன் சிறுசிறு வாக்குவாதம் வரக்கூடும். உடல் உபாதைகள் வந்து போகும். திடீர்ப் பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும்.

கடகம் - இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் சந்தர்ப்பம் அமையும். விட்டுப் பிரிந்த நெருங்கிய உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு.

சிம்மம் - சமபலன்கள் காணப்படுகின்றன. எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். வீண் அலைச்சல்களால் உடலும் மனமும் சோர்வடையும். உடல் நிலை பாதிப்படையும்.

கன்னி - சுபீட்சமான நாள். தன லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். பெண்களுக்கு திருமணம் கை கூடி வரும். வீடு, வாகன வசதிகள் உண்டாகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்

துலாம் - கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். சுய தொழிலில் ஆதாயம் குறையும். மரதீ, சோர்வு, உடல் உபாதைகள் வந்து நீங்கும்.

விருச்சிகம் - மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். வீடு, வாகன பராமரிப்புச்செலவுகள் உண்டாகும். உடல் நலக் குறைவால் மருத்துவச்செலவுகள் அதிகரிக்கும்.

தனுசு - அதிர்ஷ்டமான நாள். பணபலம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தில் சொத்து சேரும். பழைய சிக்கல்கள் சேரும். எதிர் பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வெளிநாட்டுப் பயணம் கைகூடும்.

மகரம் - இனிமையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். சகோதர உறவு பலப்படும். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள். ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும்.

கும்பம் - துயரமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். முன்கோபம், உடல் நலக் கோளாறு வந்து நீங்கும். உறவினர்கள் பாராமுகம் காட்டுவார்கள். வழக்குகள் இழுபறி நிலையில் இருக்கும்.

மீனம் - சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை தாமதமாகும். உடல் நலம் பாதிப்புறும். தொழிலில் பாடுபட்டதன் பலன் குறையும். வீண் அலைச்சல்கள் உண்டாகும்.

சந்திராஷ்டம நாள்: சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகாரியங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

சீரற்ற காலநிலை காரணமாக பதுளை மக்களுக்கு எச்சரிக்கை

சீரற்ற காலநிலை காரணமாகப் பதுளைமாவட்டவாழும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தேசிய இடர்முகாமைத்துவ மத்திய நிலையப் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி அறிவித்துள்ளார்

எதிர்வரும் தினங்களில் நாட்டிலும், நாட்டைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளிலும் மழை அதிகரிக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

விசேடமாக, மத்திய, சப்ரகமுவ, தெற்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் மேற்பட்ட மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

இந்த நிலைக்கு மத்தியில், பதுளை மாவட்ட மலைச்சாரலில் வாழும் மக்கள் அவதானத்துடன்செயற்படவேண்டுமெனத்தேசியஇடர்முகாமைத்துவ மத்திய நிலைய பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதேவேளை பஸ்ஸர - கனவரெல்ல பகுதியில்பெய்த அடை மழை காரணமாக அப் பகுதியில் உள்ள மண்மேடு சரிவதற்கு ஆரம்பித்துள்ளது.

இந்த மண்சரிவினால் 15 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு குடும்பத்தை அப்பகுதியில்இருந்து அகற்றியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஏனைய 14 குடும்பங்களையும் அந்தப் பகுதியில் இருந்து அகற்றுவதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் பதுளை மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஈ.எல்.எம் உதயகுமார தெரிவித்துள்ளார்.

மனநிறைவு, மகிழ்ச்சி என்பவை மூலம் தொற்றா நோய்களை தடுக்க முடியும்

கொழும்பு, மே 17

மனநிறைவு மகிழ்ச்சி மூலம் தொற்றா நோய்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியும் என கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதாரப்பணிப்பாளர்

மட்டக்களப்பு, கல்முனை ஆதார வைத்தியசாலையின் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

வைத்தியசாலை வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் கே.முருகானந்தன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார். அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மனநிறைவு மற்றும் மகிழ்ச்சி மூலம் தொற்றா நோய்கள் ஏற்படுவதை தடுக்க முடியும் அந்தவகையில் இந்நிகழ்வு நிச்சயம் தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும். -- என்றார்.

இந்த நிகழ்வில் ரி. சர்வானந்தன் (பொறியியலாளர், மாநகர சபை கல்முனை) எம்.கே. பேரின்பராஜா (முது நிலை சட்டத்தரணி), அதிதிகளாக ஆர் தர்மசேன (கட்டளை அதிகாரி இராணுவ முகாம் கல்முனை) கே.எஸ். ஜெயநித்தி (தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி கல்முனை) வி.திருஞானசம்பந்தர் (மின் அத்தியட்சகர் இலங்கை மின்சார சபை கல்முனை) ஆகியோர் கலந்துகொண்டனர்.

468 பிரஜைகளுக்கு இரட்டை பிரஜாவுரிமை!

வெளிநாடுகளில் வாழ்ந்த போதிலும் தமது தாய் நாட்டிற்காக உதவிசெய்வது இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக் கொண்ட அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகும் என்று வடமத்திய மாகாண அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, வெளிநாடுகளில் தாம் சம்பாதித்த செல்வத்தை இந்த நாட்டில் முதலீடு செய்து நாட்டின் அபிவிருத்திக்கு உதவுமாறும் தெரிவித்த அமைச்சர், தாம் அந்த நாடுகளில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை இலங்கைக்கு வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

பத்தரமுல்லை சுகுறுபாயவில் நேற்று நடைபெற்ற இரட்டை பிரஜாவுரிமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். இந்த நிகழ்வின்போது குடிவரவுக்குடியகல்வு திணைக்களத்தினால் 468 பிரஜைகளுக்கான இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

கனடா, பிரிட்டன், சுவீடன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுள்ள இலங்கையைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களே இன்று இந்த இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகம் எம் நிகால் ரணசிங்க குறிப்பிடுகையில்-

இந்த இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் நிகழ்வு இன்று (நேற்று) 21 ஆவது முறையாக நடைபெறுகின்றது. கடந்த இரண்டரை மாத காலப் பகுதியில் 32ஆயிரம் பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவராலும் ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய அடையாளஅட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் தாம் குடியிருக்கும் நாட்டின் கடவுச்சீட்டுடன் இலங்கைக் கடவுச்சீட்டையும் பயன்படுத்த முடியும்.

இவர்கள் இலங்கைக்கு வரும் பொழுது விசாவைப் பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரி தலைமையில் நடைபெற்றது கலைஞர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு

தேசிய சினிமாத்துறையை போஷிப்பதற்காகத் தனது வாழ் நாளை அர்ப்பணித்துச் செயற் பட்ட ஓய்வுபெற்ற கலைஞர் களைப் பாராட்டும் முகமாக அவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுத் திட்டத்தின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

தேசிய திரைப்படக் கூட்டுத் தாபன சினிமா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

1987ஆம் ஆண்டில் 500 ரூபாவாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கொடுப்பனவு பிற் காலத்தில் 2000 ரூபா வரை யில் அதிகரிக்கப்பட்டு 57 கலைஞர்களுக்கு வழங்கப்பட் டமையுடன், 1998 ஆம் ஆண் டின்பின்னர் அக்கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை.

2000 ரூபாவாகக் காணப் பட்ட இந்தக் கொடுப்பனவு 20 வருடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் ஆலோசனைப் படி கடந்த வரவு - செலவு திட்டத்தில் 5000 ரூபாவாக உயர்த்தப்பட்டது.

அதற்கேற்ப இந்த ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படும் வகையில் 163 கலைஞர்களுக்கு 5000 ரூபா வீதம் வழங்கப்படவுள் ளமையுடன், 2018 மார்ச் 31 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கமைய 60 வய துக்கு மேற்பட்ட, விண்ணப் பங்களைச் சமர்ப்பித்த சகல கலைஞர்களும் இந்தத் திட் டத்தில் இணைத்துக் கொளப் பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட திகதிக்குப் பின் னர் சமர்ப்பிக்கப்படும் விண் ணப்பங்களுக்கான கொடுப்ப னவை இரண்டாம் கட்டத்தின் கீழ் வழங்குவதற்கும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கொடுப்பனவுத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் வகை யில் 20 கலைஞர்களுக்கு உரிய காசோலைகளை இதன் போது ஜனாதிபதி வழங்கி னார்.

எமது நாட்டின் சினிமாத் துறைக்கு அளப்பரிய சேவை களை ஆற்றிய பிரபல சினிமா கலைஞரும் தேசிய திரைப் படக் கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமையாளரும் பிரதான நிறைவேற்று அதி காரியுமான கலாநிதி டி.பி. நிஹால்சிங்கவின் உருவப் படத்தினை தேசிய திரைப் படக் கூட்டுத்தாபன வளாகத் தில் இதன்போது ஜனாதிபதி யினால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கலாநிதி டி.பி.நிஹால் சிங்கவின் பாரியார் வைத்திய கலாநிதி கல்யாணி நிஹால் சிங்க அம்மையாரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் உள்ளிட்ட தேசிய சினிமா துறையின் முன்னேற்றத்துக் காக பங்களிப்பு வழங்கிய மறைந்த சகல கலைஞர்களை யும் நினைவுகூர்ந்து வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் கள் விஜயதாஸ ராஜபக்ஷ, ரஞ்சித் மத்துமபண்டார, இரா ஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு, தேசிய திரைப் படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சித்தேந்திர சேனா ரத்ன மற்றும் பிரபல சினிமா கலைஞர்கள் ரவீந்ரரந்தெனிய, மாலினி பொன்சேகா உள் ளிட்ட கலைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

10 லட்சம் ஆஸ்மா நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்

கொழும்பு, மே 17

நாட்டில் பத்து லட்சம் ஆஸ்மா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என என்று விசேட வைத் திய நிபுணர் டொக்டர் கீர்த்தி குணசேகர தெரிவித் துள்ளார்.

ஆஸ்துமா நோயால் வரு டாந்தம் ஆயிரம் நோயா ளர்கள் மரணிக்கிறார்கள்.

பாடசாலை செல்லும் 25 சதவீதமானோருக்கு ஆஸ்மாவுக்கான நோய் அறிகுறிகள் காணப்படு கின்றன.

ஆஸ்மா நோய்க்கான சிகிச்சையை அரச வைத்தி யசாலைகளில் இலவச மாகப் பெற்றுக்கொள்ள லாம் என்றும் டொக்டர் கீர்த்தி குணசேகர குறிப் பிட்டுள்ளார்.

குடிதண்ணீர் வழங்கல் கழிவுநீர் முகாமைத்துவ திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம்!

கொழும்பு, மே 17

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் செயற்படுத்தப்படும் பெரியள விலான - குடிதண்ணீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவத் திட்டங்கள் - தொடர்பான மீளாய்வுக் கூட்டம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் குண்டசாலை - ஹாரகம, கண்டி வடக்கு, பெரிய மாத்தளை ஆகிய நீர் வழங்கல் திட்டங்கள் உள்ளிட்ட பல முக்கிய செயற் திடங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் டி.ஜி.எம்.வீ. ஹப்புஆராச்சி, தேசிய நீர் வழங்கல் வடிகாமைப்புச் சபையின் தலை வர் கே.ஏ. அன்ஸார், பிரதித் தலைவர் எம். எச்.எம். சல்மான் உள்ளிட்ட உயர் அதிகாரி கள் கலந்துகொண்டனர்.

13 பேர் டெங்கு மரணம்; மீண்டும் டெங்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 17

இந்த வருடத்தின் கடந்த ஐந்தரை மாதங்களாக நாடு முழுவதும் 18 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 13 பேர் சிகிச்சை பயனின்றி இறந்துள்ளனர் எனத் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரசிலா சமரவீர தெரி வித்துள்ளார்.

இந்த நோயாளர்களில் அதிக மானோர் மேல் மாகாணத்தி லேயே பதிவாகியுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

நாட்டில் தற்பொழுது பெய்து வரும் மழையுடன் டெங்கு நோய் பரவும் ஆபத்து காணப் படுகின்றது. இதனால், சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட் டுள்ளார்.

கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதில் பொது உடன்பாடு!

கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரிப் பதில் பொது உடன்பாடு எட்டப் பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிக ரிப்புக்காரணமாகக் கடற்றொழி லாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான வேலைத் திட்டத்தைதயாரிக்கும்பொருட்டு கடற்றொழில் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சருக்கு இடையில் நடைபெற்றபேச்சுபொதுஉடன் பாட்டுடன் நிறைவடைந்தது.

கடற்றொழிலாளர் சங்கம் முன்வைத்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டமையு டன், பொது உடன்பாட்டுடன் செயற்படுவதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக, அரசு 400 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள் ளது. இந்தத் தொகை உரிய கடற்றொழிலாளர்களுக்கு சென்றடைவது தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத் தப்பட்டது.

இந்தப் பணத்தை மூன்று வங்கிகளில் வைப்பீடு செய்வ தற்கோ அல்லது அட்டை முறையில் எரிபொருள் நிவா ரணத்தைப் பெற்றுக் கொடுப் பதற்கோ கடற்றொழிலாளர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்தது.

இதன் காரணமாக, பொது நடைமுறையொன்றை வகுப் பதற்கு கடற்றொழில் திணைக் கள பணிப்பாளர் நாயகம் தலைமையில் கடற்றொழில் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்டகுழுவொன்றுநியமிக் கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தைப் பெற்றோலியக்கூட்டுத்தாபனத் திடம் சமர்ப்பிப்பது என நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சில் தீர்மானிக்கப்பட்டது.

தரம் 13 வரை உறுதிப்படுத்தப்பட்ட கல்வி; இரண்டாம் கட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்!

கொழும்பு, மே 17

தரம் 13 வரை உறுதிப்படுத் தப்பட்ட கல்வித் திட்டத்தின் இரண்டாம் கட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள் ளது.



இதற்கமைய, 150 பாட சாலைகளைச் சேர்ந்த 14 ஆயிரம் மாணவர்களுக்கு தொழில்சார் பாடவிதானத் தில் இணைந்து கொள்வதற் கான வாய்ப்புக் கிடைக்கும்.

கடந்த வருடம் மே மாதத் தில் ஆரம்பிக்கப்பட்ட முதற் கட்ட வேலைத்திட்டத்தின் கீழ் 42 பாடசாலைகளை சேர்ந்த இரண்டாயிரத்து 400 மாணவர்கள் தொழில்சார் பாடங்களைக் கற்று வருகின் றார்கள்.

இதற்குத் தேவையான இரண்டாயிரத்து 400 ஆசிரி யர்களும் இணைத்துக் கொள் ளப்பட்டிருக்கிறார்கள். இரண் டாம்கட்டத்தை அமுல்படுத்து வதற்காகத் தெரிவு செய்யப் பட்ட 150 பாடசாலைகளில் 417 ஸ்மார்ட் வகுப்பறைக ளும் அமைக்கப்பட இருக் கின்றன.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சை யில் சித்தியடைந்த மாண வர்களுக்கும், சித்தியடை யாத மாணவர்களுக்கும் இந் தப் பாடநெறியில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

தாமதிக்கப்பட்ட நீதி

மறுக்கப்பட்ட நீதியாகின்றது

சட்டத்துறை தாமத்தினால் தப்பிக்கும் குற்றவாளிகள்

இலங்கையின் நீதித்துறையில் புரையோடிப்போயிருக்கும் பிரச்சினைகளை அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நாடாளுமன்றத்தில் காத்திரமான வகையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

குற்றவியல் வழக்குகளில் நீதி தாமதப்படுத்தப்படுவதைப் பயன்படுத்தி பெரும் குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துக் கொள்கின்றனர் என்பது அவரது கருத்துக்களின் சாராம்சமாக அமைந்திருந்தது.

நாடாளுமன்றத்தில் நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம், தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியன மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி யிருந்தார்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் முக்கியமாக அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயல் கள் உரிய நேரத்தில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

ஆட்சிமாற்றமொன்று ஏற்படும்வரை அவ்வாறானவர்களுக்கு எதிரான வழக்குகள் இழுத்தடிக்கப்படும். அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த நடவடிக்கைகள் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப் படும். ஊழல், மோசடிகள் உயர்ந்த மட்டத்தில் ஈடுபடுவதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

முக்கியமான அரசியல் புள்ளிகள் தொடர்புபட்ட குற்றச்செயல்கள் பற்றிய விசாரணைகளை நடத்திமுடிப்பதற்கு ஐந்து 'வருட நாடாளுமன்றக் காலம் போதுமானதாக இல்லை. ஆட்சிமாற்றங்களின் பின்னர் மோசடிக்காரர்கள் நிரந்தரமாகத் தப்பிச் செல்லும் வரலாறும் காணப்படுகின்றது.ஊழல், மோசடிகள் தொடர்பான விடயத்தில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி இந்த அரசு ஆட்சிக்கு வந்தது.

துரதிர்ஷ்டவசமாக ஆட்சிமாற்றம் ஏற்பட்டு மூன்றுவருடங்களில் ஒரு வழக்கில் மாத்திரமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கும் தற்போது மேன் முறையீட்டுக்கு உட்பட்டுள்ளது.

பொதுவான சட்ட அடிப்படையின் கீழ் இரண்டு மேன்முறையீடுகளுக்கு அதாவது, மேலும் ஒரு தசாப்தத்துக்கு வழக்கை இழுத்துச்செல்ல முடியும்.துரிதமான விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் வழக்குகள் காலதாமதமாக இடம்பெறுவதைக் காண்முடிகின்றது.

இருபது வருடங்கள் வழக்கு இழுபட்டுச் செல்லும் நிலைமையும் உள்ளது. இதற்கு சிறந்த உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இலக்குவைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்த வழக்கைக் கூறமுடியும். 17 வருடங்களின்பின்னரே இந்த வழக்கில்தண்டனை வழங்கப்பட்டது. இந்த வழக்கில் இந்து மதகுரு ஒருவரும், அவருடைய பாரியாரும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இதில் மதகுருவுக்கு 17 வருடங்களின் பின்னர் தண்டனை வழங்கப்பட, அவருடைய மனைவி 17 வருடங்களின் பின்னர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

அதுவரை அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர் மனோநிலை பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். இது சட்டத்துறையில் காணப்படும் காலதாமதத்துக்குச் சிறந்த உதாரணமாகும் என்றார் அவர். இந்த விடயங்களை யாரும் தட்டிக்கழிக்க முடியாது.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் காலத்திற்கு மிகவும் அவசியமான நீதித்துறை திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் 67 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் திருத்தச் சட்டம் அண்மைக் காலத்தில் சகலராலும் பேசப்படுகின்ற ஒரு விடயமாகவே காணப்பட்டது. அதுவும் எதிர்த்தரப்பினர்களில் ஒரு பிரிவினருக்கு இது கிலியை ஏற்படுத்தும் ஒரு விவகாரமாகவே உள்ளதை அவர்களின் வாதங்கள் வெளிக்காட்டி நின்றன. அரசியல் பழிவாங்கல் நோக்குடன் கூடியதாக இந்தத் திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்படுவதாகக் கூட்டு எதிரணித் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர்.

உண்ட நஞ்சுக்குத்தான் பயப்பட வேண்டும். உண்ணாத நஞ்சு குறித்து ஏன் அஞ்ச வேண்டும், அல்லது அலட்டிக் கொள்ள வேண்டும் என்ற கேள்வி இங்கே எழுகிறது.

2015இல் நல்லாட்சி அரசு பதவிக்கு வரும் போது நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளில் மிக முக்கியமான வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டே விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருக்கும், நீதியமைச்சர் தலதா அத்துகோரள அரசின் இந்த நடவடிக்கை எவர் மீதும் பழிவாங்கும் நோக்கத்துடன் கூடிய தல்லவெனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் கூட்டு எதிரணியினர் எப்படியேனும் நீதித்துறை திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்படுவதைத் தடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். முதலில் கொண்டுவரப்பட்ட திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றம் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதையடுத்து அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலம் எந்தவொரு தரப்பையோ, நபரையோ இலக்கு வைத்து கொண்டுவரப்பட்டதல்ல. நீண்டகாலத் தேவையாகக் காணப்பட்ட சட்டமூலமே கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுமக்களின் பணத்தை, பொதுச் சொத்துக்களை கொள்ளையடித்தவர்களைச் சட்டத்தின் முன்னால் நிறுத்தித் தண்டிப்பது கட்டாயமானதாகவே நோக்கவேண்டியுள்ளது. இதனைச் செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்குரியதாகும். இதில் எவர் விடயத்திலும் பாரபட்சம் காட்டப்படக் கூடாது என்பதில் அரசு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்ற போதிலும் அவை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில் நீண்ட காலத் தாமதம் காணப்படுகின்றது. இது மக்களுக்களித்த வாக்குறுதிகள் மீறப்படுவது போன்ற பார்வையையே காட்டுகின்றது. மோசடிகளில் தொடர்புபட்ட அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு இந்தக் காலதாமதம் வகை செய்வதாகவே உணர முடிகிறது. கடந்த காலத்தைப் போன்று நல்லாட்சியிலும் தாமதத்துக்கு இடமளித்தால் மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலையே உருவாகலாம்.

உயர்நீதிமன்றங்களில் நாளாந்தம் வழக்குகள் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வழக்குகள் குவிந்து காணப்படுவதால் ஊழல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் நீண்ட காலத் தாமதம் ஏற்படுவதன் காரணமாகவே விசேட நிதிமன்றங்கள் மூன்றை அமைக்க நீதியமைச்சு முடிவெடுத்தது. இதில் எந்தவிதமான உள்நோக்கங்களும் கிடையாது. பாரபட்சமற்ற விசாரணைகளை முன்னெடுப்பதே நோக்கமென அரசு தெரிவித்திருக்கின்றது. இதனை பெரும் தவறாகக் கருத முடியாது.

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்து மூன்று வருடங்கள் முடிந்த நிலையிலும் ஊழல், மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது. அரசாங்கத்தினால் குற்றவாளிகளுக்குஉரியதண்டனைப்பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாகவே மக்கள் கருதுகின்றனர். அரசு குற்றவாளிகளைப் பாதுகாக்கின்றதா என்ற மனநிலையும் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

ஊழல் மோசடியை நிறுத்துவதற்கு சட்டரீதியான பொறிமுறையொன்றை உருவாக்குமாறு சிவில் சமூகங்கள் உட்படபுத்திஜீவிகள் பலதடவைகள்கோரிக்கை விடுத்து வந்தனர். அதன் பிரதிபலனாகவே ஊழல் மோசடிகளை விசாரிக்க தனியான விசேட நீதிமன்றங்களை அமைக்க அரசு திட்டம் வகுத்து இதன் பொருட்டே நீதித்துறை திருத்தச் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது. உண்மையிலேயே வழக்குகள் தேங்குவதை முடிவுக்குக் கொண்டுவர இத்திருத்தச் சட்டம் வழிவகுக்கும். ஆரம்பத்தில் மூன்று நீதிமன்றங்களை மட்டுமே அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விசேட நீதிமன்றங்கள் விடயத்தில் மட்டுமல்ல சாதாரணமாக உள் நீதிமன்றங்கள்விடயத்தில்கூடக்குற்றமிழைத்தோர் தப்பிப்பதற்கு வழிதேடிக் கொண்டிருப்பதையே நோக்க வேண்டியுள்ளது.

ஊழல் மோசடிகளில் தொடர்புபட்டவர்கள் இருப்பினும் அவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டியவர்களாவர்.'பெரிய திமிங்கிலங்கள் தப்புகின்றன. நெத்தலிகள் மட்டுமே வலையில் சிக்கி மாய்கின்றன. இந்தநிலை மாற வேண்டும்' என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அரசு இப்போது எடுத்திருக்கும் முடிவு சரியானதே என்பதை மறுக்க முடியாது. ஊழல், மோசடிக்காரர்கள் இனியும் தப்புவதற்கு இடமளிக்கப்படக்கூடாது. விரைவான நடவடிக்கைகள் மூலம் குற்றவாளிகளுக்கு உச்சபட்சத் தண்டனை வழங்கப்பட வேண்டும். நீதித்துறை மீது மக்களின் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்கு இந்தப் புதிய திருத்தச் சட்டமூலம் வழிவகுக்கும் என நம்பலாம்.

- நன்றி ஆதவன் -

தெற்கில் குறிவைக்கப்பட்ட ஊடகவியலாளர்கள்

வழக்குகளின் பின்னணியில் நடப்பவைதான் என்ன?

வழிமூலம் – 'டெய்லி மிரர்'
மொழியாக்கம் – நித்தியபாரதி



கடத்தப்பட்டு தாக்கப்பட்ட 'த நேசன்' நாளிதழின் முன்னாள் துணை ஆசிரியர் கீத் நொயர் வழக்கு மற்றும் 'த சண்டே லீடர்' வார இதழின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலை வழக்கு விசாரணைகள் தொடர்பாக, குற்றப் புலனாய்வுத் துறையால் கல்கிஸை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய சாட்சியமானது, ஆட்சி மாற்றம் இடம்பெறுவதற்கு முன்னர் சேகரிக்கப்பட்டது என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த வாரம் 'டெய்லி மிரர்' பத்திரிகைக்கு நேர்காணல் ஒன்றை வழங்கிய போதே கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார். தமது ஆட்சியின் போது இவ்விரு வழக்கு விசாரணைகள் தொடர்பான தொலைபேசி உரையாடல் பதிவுகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என இவ்விரு சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர் எவ்வித காலதாதமுமின்றி சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டன எனக் கோட்டாபய ராஜபக்ஷ தனது நேர்காணலில் தெரிவித்தார்.

இவ்விரு குற்றச் செயல்களுடனும் தொடர்புபட்ட குற்றவாளிகளை அடையாளங் காண்பதற்கான விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அனைத்துப் புலனாய்வு அமைப்புக்களிடமும் தான் கட்டளையிட்டார் என கோட்டாபய ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

குறிப்பாக லஸந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை மற்றும் நொயர் கடத்தப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை உடனடியாக இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என அவர் தெரிவித்தார்.

இவ்விரு வழக்குகள் தொடர்பான சாட்சியங்களை ராஜபக்ஷ அரசாங்கமே கண்டுபிடித்ததாகவும், குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தற்போதைய ஆட்சிக்காலத்தில் இவை

கண்டுபிடிக்கப் பட்டன எனக் கூறுவதில் எவ்வித உண்மை யும் இல்லை எனவும் கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

"குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரி கள் எவற்றையும் கண்டுபிடிக்கவில்லை. தற்போது காணப்படும் அனைத்துச் சாட்சியங்களும் எமது ஆட்சிக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவையாகும். நாங்கள் கண்டுபிடித்த ஆதாரத்தை தாம் கண்டுபிடித்தவை எனக் குற்றப்புலனாய்வுத் துறை அதிகாரிகள் திரிபுபடுத்துகின்றனர்" என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்தார்.

தற்போது கல்கிஸை நீதிமன்றில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முக்கிய சாட்சியத்தைப் பெறுவதற்கான ஆரம்பக் கட்டகட்டளையைத் தான் தனிப்பட்ட ரீதியாக வழங்கியிருந்தார் என இச் சாட்சியத்தைப் பயன்படுத்தியே லஸந்த விக்கிரமதுங்க மற்றும் கீத் நொயர் வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் குற்றப் புலனாய்வுத் துறையினர் கைது செய்தனர் எனவும், ஆனால் தற்போது இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறையினர் தாம் தப்பிப்பதற்காக தன் மீது பழிசுமத்துகின்றனர் எனவும் கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

"குற்றப் புலனாய்வுத் துறையினர் சந்தேகநபர்களைக் கைதுசெய்தமையுடன் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயரை நீங்கள் கூறினால் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள் எனச் சந்தேகநபர்களிடம் தற்போது கூறுகின்றனர்" என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார்.

இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையின் இயக்குநர் சானி அபேயசேகர பின்வருமாறு விளக்கமளித்தார்.

"தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் குற்றவியல் விசாரணைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் துறை கருத்துக் கூறாது. இவ்வழக்கு விசாரணைகள் தொடர்பான சாட்சியங்கள் சட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது குற்றவியல் வழக்கு விசாரணைகள் தொடர்பான நடைமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பளிக்கப்படும்.

"நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் சாட்சியங்களில் பெரும்பாலானவை பொதுமக்களின் வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலைவழக்கு மற்றும் கீத் நொயர் கடத்தப்பட்ட வழக்குத் தொடர்பான விசாரணைகள் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையின் அறிக்கைகள் முறையே ய 92/2009 ய 1535/2008" என்கின்ற வழக்கு இலக்கங்களின் கீழ் கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப் படுகின்றன.



"2008 - 2014 காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட – நீதிமன்றில் இதுவரை சமர்ப்பிக்கப்படாத – எந்தவொரு ஆதாரங்களையும் குற்றப்புலனாய்வுத் துறையினர் நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை" – என இயக்குநர் சானி அபேயசேகர தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவால் முன்வைக் கப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக சானி அபேயசேகரவிடம் வினவியபோது, *"இந்த வழக்கு விசாரணைகள் தொடர்பான புதிய ஆதாரங்களையே குற்றப்புலனாய்வுத் துறையினர் நீதிமன்றில் தற்போது சமர்ப்பிக்கின்றனர்"* என இயக்குநர் அபேயசேகர தெரிவித்தார். ஆனால் இது தொடர்பாக, கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நேரடியாகப் பதிலளிப்பதற்கு அபேயசேகர மறுத்து விட்டார்.

ஆனால் அவர் தனது அறிக்கையில் "தற்போதைய அல்லது முன்னர் திரட்டப்பட்ட ஆதாரங்களை குற்றவியல் விசாரணைக்காக காவற் துறையிடம் வழங்க வேண்டிய சட்டக் கடப்பாடு காணப்படுகிறது. இது தொடர்பான சாட்சியங்களை காவற்துறையினர் நீதிமன்றில் சமர்ப்பிப்பதற்கு இவ்வாறான ஆதாரங்கள்தேவைப்படுகின்றன.

"இவ்வாறான வழக்குகள் தொடர்பான சாட்சியங்களையும் ஆதாரங்களையும் கொண்டுள்ள பொதுமக்கள் மற்றும் தற்போதைய அல்லது பழைய அதிகாரிகள் தாம் வைத்திருக்கும் ஆதாரங் களை குற்றப் புலனாய்வுத் துறையிடம் சமர்ப்பிக்குமாறும் இதன்மூலம் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிய முடியும் எனவும் இவ்வாறான இரகசியத் தகவல்களை சட்டத்தின் பிரகாரம் வழக்கு விசாரணைகளுக்காகப் பகிர்ந்து கொள்ள முடியும் எனவும் நாங்கள் இன்றும் கூட கோரிக்கை விடுத்து வருகிறோம்" – என அபேயசேகர தெரிவித்தார்.

கீத் நொயர் வழக்குத் தொடர்பாக தன்னிடமிருந்த அனைத்துத் தகவல்களையும் கடந்த ஆண்டு குற்றப் புலனாய்வுத் துறையிடம் தெரிவித்தார் எனவும், கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். 'நான் குற்றப் புலனாய்வுத் துறையிடம் சாட்சியம் வழங்கியபோது தகவல்களை வெளியிட வேண்டாம் எனக் கேட்டிருந்தேன். ஆனால் இந்த விவகாரமானது அவர்களுக்கு அப்பாலானது. அவர்கள் நீதிமன்றில் 'பி' அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது நீதிபதியிடம் எதைக் கூற வேண்டுமோ அதை மட்டுமே வழங்க வேண்டும். அவர்கள் முழுமையான தகவல்களையும் வழங்கக் கூடாது. இது அநீதியான செயலாகும். அத்துடன் எனக்கு எதிராக ஊடகங்களிடம் குற்றப் புலனாய்வுத் துறையினர் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்திருந்தனர்" – என கோட்டாபய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை அரசால் வெளியிடப்படும் பத்திரிகை ஒன்றில் நொயர் வழக்குத் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட பத்தியில் குற்றப் புலனாய்வுத் துறையினரால் குறித்த ஊடகத்திடம் வழங்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் பெரிய எழுத்துக்களில் சேர்க்கப்பட்டிருந்தன.

இவ்வாறான ஒரு செயலை குற்றப் புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டமை அநீதியானதாகும். குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நீதிபதியிடம் 'பி' அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது தமக்குத் தேவையான விடயத்தை மட்டுமே கூறவேண்டும்.

"முதலில் இவர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இவர்கள் முழுத் தகவல்களையும் வழங்குவதன் மூலம் உண்மையான குற்றவாளிகளுக்குப் பதிலாக அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்படுகின்றனர். இதனால் உண்மையான குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது" என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

(தொடரும்...)

> கீத் நொயர் வழக்குத் தொடர்பாக தன்னிடமிருந்த அனைத்துத் தகவல்களையும் கடந்த ஆண்டு குற்றப் புலனாய்வுத் துறையிடம் தெரிவித்தார் என நீதிமன்றில் எந்தெந்தத் தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதைக் காவற் துறையினர் தீர்மானிக்க வேண்டும் எனத் தாம் கோரிக்கை விடுத்தார் எனவும், கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கல்விக் கதிர் வெளியீடு

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 31

பகுதி - II

44) பாம்பு கடித்தபோது உடனடியாக அளிக்கப்படும் முதலுதவி

1. துப்புரவான காற்றோட்டம் கிடைக்குமாறு செய்தல்
2. இறுக்கமான ஆடைகளைத் தளர்த்தல்
3. கடித்த இடத்தைச் சவர்காரத்தினாலும் தண்ணீராலும் கழுவுதல்
4. நோயாளியின் இரு பாதங்களையும் ஏறத்தாழ அடிக்குமேல் உயர்த்திவிடுதல்

45) மின்குமிழை ஒளிரச் செய்வதற்காக A ,B என்னும் இரு ஆணிகளையும் தொடுப்பதற்கு பயன்படுத்தப்படுவது



1. வாணித்தராசு
2. ஈயத்தாள்
3. திமைத்தாள்
4. ரிசூத் தாள்

46) உடையில் பட்ட தார்க் கறையை அகற்றுவதற்கு மிக உகந்தபொருள்

1. தேங்காய் எண்ணெய் 2. மண்ணெண்ணெய்
3. எலுமிச்சைச்சாறு 4. சவர்க்காரம்

47) தொற்றுநோய் பிரதேசம் பூராகவும் பரவும்போது உடனடியாக எவருக்கு அறிவிக்க வேண்டாம்?

1. பொலிஸ் நிலைய பொறுப்பு அலுவலர்களுக்கு
2. மருத்துவமனையின் மருத்துவ அலுவலர்களுக்கு
3. பாடசாலைஅலுவலர்களுக்கு
4. பொது சுகாதார பரிசோதகருக்கு

48) இலங்கையின் மிக உயரமான நீர் வீழ்ச்சி

1. பம்பரகந்த 2. தியலும 3. லக்சபான 4. துன்கிந்த

49) நிலநடுக்கத்தின்போது ஒருவர் தன்னைப் பாதுகாக்க உடனடியாக செய்யவேண்டியது

1. இருக்கும் இடத்திலேயே இருத்தல்
2. மரத்திற்கு கீழே இருத்தல்
3. உயரமான கட்டடத்திற்கு செல்லல்
4. திறந்த வெளிக்குச் செல்லல்

50) நீரிழிவைக் கட்டுப்படுத்த மிகஉகந்த உணவு

1. பான் 2. நூடில்ஸ் 3. கௌப்பி 4. மரவள்ளி

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 32

பகுதி - I

❖ அடுத்து வரவேண்டிய பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க

1)



2)



3) தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான படம் எது?

மின்கலம் - வெளிச்சம் - கையாளல் இலகு

❖ ஒவ்வொரு கவிதையிலும் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

5) பிள்ளைகளின் கூட்டம்
இருக்கும் இடம்
பூக்கள் ஆயிரம்
மலர்ந்த .....

1. தளம் 2. களம் 3. குளம்

நிலா

தங்க நிலா ஓடி வா
தவழ்ந்து தவழ்ந்து மேல வா!
எங்கும் ஒளி பாய்ச்ச வா
பாடம் சொல்லிக் கொடுக்க வா!
கூடிக் கணக்குப் போட வா
பாடிப் பாடி ஆட வா!
பரந்த முகம் காட்ட வா
கோடிப் பூக்கள் பறித்து வா!
கொண்டையிலே சூட்ட வா!

தந்திர நரி

ஒரு அடர்ந்த காட்டில் சிங்கம் ஒன்று தனியாக பசியின் காரணமாக மானை துரத்துகிறது. சிங்கத்திடம் மாட்டிக்கொள்ளாமல் மான் எப்படியோ தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. சிங்கம் ஏமாற்றத்துடன் திரும்பியது. ஓடும்போது மானுக்கு பல இடங்களில் காயம் பட்டு ஓர் இடத்தில் விழுந்தது.

இதை பார்த்த நரி ஒன்று இதை எப்படியாவது உண்ண வேண்டும் என்று எண்ணியது. தன் தந்திரத்தால் மானிடம் சிறிது தொலைவில் இருந்து பேச்சு கொடுத்தது. மானை எப்படியாவது நம்ப வைத்து உண்ண வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் களமிறங்கியது.

தொலைவில் இருந்தே 'உடல்நிலை சரியில்லையா!' – என்று இதே போன்று அன்பாக பேசிக்கொண்டே சிறிது சிறிதாக அருகில் சென்றது. மானும் உதவி தான் செய்கிறது என்று எண்ணி நம்பிவிட்டது.

நரி மகிழ்ச்சியுடன் அருகில் சென்றது. மான் தனக்கு உதவி செய், என்னை தூக்கிவிடு என்று கூறும்போதே நரி அதன் தொண்டை பகுதியை கடிக்க மான் இறந்து போனது. தன் பசியைத் தீர்த்துக்கொண்டது நரி. அரவணைப்பது போல அன்பாக பேசி தன் எண்ணங்களை நிறை வேற்றிக்கொண்டது.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

விளக்கம்: தீய குணமுடையவர் அன்பின் மிகுதியினால் விழுங்கு பவர் போல் பார்த்தாலும் அவருடைய நட்பு வளர்வதை விடக் குறைவது நல்லது.



புள்ளிகளை இணையுங்கள் வரும் உருவத்தை கண்டுபிடியுங்கள்

தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலை தடுத்தல் தொடர்பான தேசிய ஒருங்கிணைப்பு குழுவிற்கு புதிய அங்கத்தவர்கள்!

கொழும்பு, மே 17

நிதி தூய்மையாக்கலை தடுப்பது மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலைத் தடுப்பது தொடர்பிலான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் நிதிப் புலனாய்வுப்பிரிவு நிதியமைச்சின் கீழ் 2006ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அத்தோடு, நிதி தூய்மைப்படுத்தலை தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலைத் தடுப்பதற்குமான தேசிய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நிதி தூய்மைப்படுத்தலை தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கப்படுவதை தடுப்பது தொடர்பாக தேசிய ஒருங்கிணைப்புக்குழு என்ற பெயர் புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவளர்ச்சியுடன் நிதி மோசடி நாளாந்தம் அதிகரித்துள்ளதுடன் இதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காகப் பல்வேறு அரச நிறுவனங்களுடனான தொடர்புகள் அத்தியாவசிய விடயமாக அமைந்துள்ளன.

இதற்கமைவாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் பணிப்பாளர் நாயகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சினதும் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அமைச்சினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய வகையில் நிதித்தூய்மையாக்கலை தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்கலைத் தடுத்தல் தொடர்பாக தேசிய இணைப்புக் குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக பதிய அங்கத்தவர்களை இணைப்பது தொடர்பில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சமர்ப்பித்த ஆவணத் திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம்:

வெளிநாட்டவர் பணங்களை மாற்றுவதற்கு கருமபீடங்கள்!

கொழும்பு, மே 17

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தரும் வெளிநாட்டவருக்கு நிதியை பரிமாற்றிக் கொள்வதற்கு வசதியாக கருமபீடங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கப்பகுதியால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடத்தப்பட்டு வரும் பணத்தை மாற்றிக் கொள்வதற்கான கரும பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

'சுவாசம்' கலை நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக ஜனாதிபதி!

கொழும்பு, மே 17

'சுவாசம்' என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெற்ற தமிழ் கலை நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

பிஷப் கல்லூரியின் கேட் போர் கூடத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் இந்த நிகழ்வு நடைபெற்றது .

இந்திய உயர் ஸ்தானிகராலயமும் அருள் ஸ்ரீ கலையகமும் இணைந்து இந்த கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த கலை நிகழ்ச்சியை நெறியாள்கை செய்த கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் மற்றும் இசை நடன கலைஞர்களுக்கு ஜனாதிபதி நினைவுப் பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் தரன்ஜித் சிங் மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பஸ் உரிமையாளர் சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு அரசு தயார்

தனியார் பஸ் சங்கம் எதிர்ப்பார்த்த அளவு பஸ் கட்டணம் அதிகரிக்கப்படாவிட்டாலும், அவர்களது கோரிக்கை குறித்து ஆராய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால், அந்த நிலைமையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு சுமார் ஆயிரத்து 500 பஸ்கள் இலங்கை போக்குவரத்து சபையில் தயாராகவுள்ளன எனவும் மேலதிகரயில் சேவைகளும் தயார் நிலையில் உள்ளன எனவும் அமைச்சர் தெரிவித் தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் விடுத்துள்ள வேலை நிறுத்த எச்சரிக்கை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிடார்.

பஸ் கட்டணம் நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஆகக்குறைந்த பஸ் கட்டணம் 10 ரூபாவாக இருப்பதுடன் 6 .5 சதவீதத்தால் கட்டணத்தை மறுசீரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, அதற்கு சமமான வகையில் பஸ் கட்டணத்தை மறுசீரமைப்பதற்கான அமைச்சரவை ஆவணம் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் நேற்று முன் தினம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

புத்திஜீவிகள் சபை முன் வைத்த 12 பரிந்துரைகளை கருத்திற் கொண்டு இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, தனியார் பஸ் சங்கம் குறிப்பிட்ட பஸ் கட்டண மறுசீரமைப்பு போதுமானதல்ல என்று தனியார் பஸ் சங்கம் கூறியுள்ளது. இவர்களது கோரிக்கை பஸ் கட்டணத்தை 10 சதவீதத்தினால் மறுசீரமைப்புச் செய்து ஆகக்குறைந்த ரூபா 10.00 கட்டணத்தை அதிகரிக்க வேண்டுமென்றும் அதன் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இல்லாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டி வரும் என்றும் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, தனியார் பஸ் சங்கம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால், 24 மணிநேரமும் செயல்படக்கூடிய வகையில், போதியளவு பஸ்கள் இலங்கை போக்குவரத்துச் சபையில் உள்ளன என அதன் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் பணியாற்றும் அனைத்து பஸ் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் சிற்றூழியர்களின் விடுமுறைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

நாளாந்தத் தேவையின் அடிப்படையில் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்று சிறிவர்தன மேலும் தெரிவித்தார்.

அரச இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் புதிய தலைவர்களுக்கு நியமனக்கடிதங்கள்!

அரச இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்ட புதிய தலைவர்கள் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் தமது நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்று இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - சிரேஷ்ட திரைப்பட இயக்குனர திருமதி இனோக்கா சத்யாங்கனி.

சுயாதீன தொலைக்காட்சி சேவை நிறுவனம் - திருமதி திலக ஜயசுந்தர.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - மொஹமட் சித்திக் பாருக்.

செலசினே தொலைக்காட்சி நிறுவனம் - திருமதி உமா ராஜமந்திரி.

- ஆகியோர் தமது நியமனக் கடிதங்களை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஊடக பிரதி அமைச்சர் லசந்த அளுகிய வண்ண, நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்கிரமரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

அணு ஆயுதத் திட்டங்களை முழுமையாகக் கைவிடச் சொன்னால் ட்ரம்புடனான பேச்சு ரத்தாகும் என வடகொரியா மிரட்டல்!

பியாங்யாங், மே 17

அணு ஆயுத திட்டத்தை முழுமையாக கைவிடும்படி அமெரிக்கா வலியுறுத்தினால் ட்ரம்புடன் நடைபெற உள்ள பேச்சை ரத்து செய்துவிடுவோம் என வடகொரியா மிரட்டியுள்ளது.

அணு ஆயுத பரிசோதனைகள், ஏவுகணை சோதனைகளால் தொடர்ந்து சர்வதேச நாடுகளை மிரட்டி வந்த வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன், தற்போது மற்ற நாடுகளுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிக்க விரும்புகிறார்.

இனி அணு ஆயுத சோதனைகள் எதையும் நடத்தமாட்டோம் என்றும் அறிவித்த அவர் கடந்த மாதம் தென் கொரியா

ஜனாதிபதி மூன் ஜேஇன் உடன் பேச்சு நடத் தினார்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பேச்சு உலக நாடுகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உடன் பேச்சு நடத்த கிம் முடிவு செய்தார்.

இந்தச் சந்திப்பு எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தென் கொரியாவில் நடைபெறும் அமெரிக்கா-தென்கொரியா ராணுவ ஒத்திகை வட கொரியாவை ஆத்திரம் அடையச் செய்துள்ளது.

இதனையடுத்து, தென் கொரியா உடன் நேற்று நடைபெற இருந்த உயர்மட்ட பேச்சை வட கொரியா ரத்து செய்துள்ளது.

மேலும், அணு ஆயுத திட்டங்களை முழுமையாக கைவிட அமெரிக்க வலி யுறுத்தினால் சிங்கப்பூரில் எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி நடக்க உள்ள ட்ரம்ப்- கிம் ஜாங் இடையிலான பேச்சு ரத்தாகும் என வடகொரியா எச்சரித்துள்ளது. அமெரிக்காவு டன் பொருளாதார உறவு வைத்துக் கொள்ள மாட்டோம் என்றும் அது மிரட்டியுள்ளது.

அணு ஆயுத திட்டங்களை கைவிட்டால் அமெரிக்கா உரிய இழப்பீடு கொடுக்க முன் வந்திருப்பதை ஏற்கமாட்டோம். எங்களது பொருளாதார மேம்பாட்டிற்கு அமெரிக்காவின் எந்த உதவியையும் எதிர்பார்க்கவில்லை என வடகொரியா கூறியுள்ளது. இத்தகவலை வடகொரிய அரச செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இந்த விடயத்தில் வடகொரியாவின் நிலைப்பாட்டை உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம் என்றும் தங்கள் கூட்டாளிகளுடன் உள்ள நெருக்கம் தொடரும் என்றும் வெள்ளை மாளிகை ஊடகப் பிரிவு செயலாளர் செய்தி வெளியிட்டுள்ளார்.

58 கோடி போலிக் கணக்குகளை முடக்கியது பேஸ்புக் நிறுவனம்!

கலிபோர்னியா, ம 17

பேஸ்புக் நிறுவனம் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 58 கோடி போலிக் கணக்குகளை நீக்கியுள்ளது.

சமூக வலைத்தளமான 'பேஸ்புக்' எனப்படும் முகநூலை உலகம் முழுவதும் கோடிக்கணக்கானோர் பயன்படுத்தி வருகிறார்கள்.

இதற்கிடையே, முகநூல் தொடர்பாக இங்கிலாந்தில் பெரும் சர்ச்சை வெடித்தது.

முகநூல் பயன்படுத்தும் சுமார் 5 கோடி பேரைப் பற்றிய விவரங்கள் ஒரு 'ஆப்' மூலம் திருடப்பட்டு, கேம்பிரிட்ஜ் அனாலிட்டிகா என்ற அரசியல் பிரசார நிறுவனத்திடம் பகிர்ந்து கொள்ளப்பட்டதாகத் தகவல் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த விவரங்கள் அரசியல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்டன என கூறப்பட்டது.

இதையடுத்து, பேஸ்புக் வலைத்தளத்தில் வன்முறைகளைத் தூண்டும், ஆபாசப் படங்கள் மற்றும் பயங்கரவாதக் கருத்துகளை வெளியிடும் முகநூல் கணக்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என பேஸ்புக் நிறுவனம் அறிவித்திருந்தது. மேலும், போலி முகநூல் கணக்குகள் முடக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், கடந்த 3 மாதங்களில் மட்டும் 58.3 கோடி போலி முகநூல் கணக்குகள் மூடப்பட்டன எனத் தெரிவித்துள்ளது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் 3.4 மில்லியன் தவறான புகைப்படங்கள் நீக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கொரியா உடனான பேச்சை ரத்துச் செய்தது வடகொரியா!

சியோல், ம 17

அமெரிக்கா, தென்கொரியா இணைந்து நடத்திய ராணுவ பயிற்சி காரணமாக நற்று நடைபெற இருந்த உயர்மட்ட பேச்சை வடகொரியா ரத்து செய்தது.

கொரியப்போருக்கு பின்னர் பகை நாடுகளாக மாறிய வட கொரியாவும், தென்கொரியாவும் பகைமை மறந்து இப்போது நட்பு பாராட்ட தொடங்கியுள்ளன.

கடந்த மாதம் 27 ஆம் திகதி வட கொரியாவின் தலைவர் கிம் ஜாங் அன்னும், தென் கொரியாவின் ஜனாதிபதிமூன்ஜேஇன்னும்எல்லையில் பன்முன்ஜோம் கிராமத்தில் அமைந்து உள்ள அமைதி இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தினர். இது உலக அளவில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இரு தலைவர்களும் சந்தித்துப் பேசியமையுடன், முடிவில், கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர். கொரிய தீபகற்ப பகுதியை அணு ஆயுதமற்ற பிரதேசமாக ஆக்குவதற்கு வடகொரியா எடுக்கிற முக்கிய நடவடிக்கைகள் அர்த்தம் உள்ளவை என்று தென், வடகொரியா ஒப்புக் கொண்டுள்ளன.

இதில் இரு தரப்பும் தங்களது பொறுப்புகளை, பங்களிப்புகளை செய்வதற்கு உறுதி எடுத்துக் கொண்டு உள்ளன என்று அதில் கூறப்பட்டு இருந்தது. மேலும் கொரிய போரை முறைப்படி முடிவுக்கு கொண்டுவரவும் இரு தலைவர்களும் உடன்பட்டனர்.

இந்த நிலையில், பன்முன் ஜோம் கிராமத்தில் நேற்று புதன்கிழமை வட, தென் கொரியா அரசுகள் இடையே உயர்மட்ட அளவிலான பேச்சு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பேச்சின் போது, கொரியப்போரை அதிகாரபூர்வமாகவும், முறைப்படியும் முடிவுக்கு கொண்டுவருவது பற்றியும், கொரிய தீபகற்ப பகுதியில் அணு ஆயுதங்களை முழுமையாக கைவிடுவது பற்றியும் விவாதித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், தென் கொரியா உடன் நேற்று நடைபெற இருந்த உயர்மட்ட பேச்சை வடகொரியா ரத்து செய்துள்ளது. அமெரிக்கா மற்றும் தென்கொரியா இணைந்து மேற் கொண்ட ராணுவ பயிற்சி வடகொரியா உடனான உறவுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இருக்கிறது எனக் கூறி பேச்சை வட கொரியா ரத்து செய்துள்ளது.

நேபாளத்தில் விமானம் விபத்து; விமானிகள் இருவர் மரணம்

நேபாளத்தின் வடமேற்குப் பகுதியில் பறந்த சிறியரக விமானம் ஒன்று மோசமான வானிலை காரணமாக விபத்துக்குள்ளானதில் இரண்டு விமானிகள் உயிரிழந்துள்ளனர்.

நேபாள நாட்டின் சிமிகோட் பாஸ் மாகாணத்தின் மலைப் பகுதியில் அமைந்துள்ள சுர்க் ஹெட் விமானதளத்தில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று சரக்குகளை ஏற்றிக் கொண்டு காலை 6.12 மணியளவில் பறந்து சென்றது.

விமானம் புறப்பட்டுச் சென்ற சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணம் செய்த விமானி கிரன் பட்டாராய் மற்றும் துணை விமானி அதித்யா நேபாளி ஆகியோர் விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்து குறித்து நேபாள சிவில் விமானப் போக்குவரத்து ஆணையத் துணை இயக்குநர் ஜெனரல் போக்ரேல் கருத்துத் தெரிவிக்கையில் –

விபத்துக்குள்ளான மகலு ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சிறிய ரக விமானம் புறப்பட்டுச் சென்ற சில நிமிடங்களிலேயே விமான கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்தது.

மேலும், வானிலை மோசமாக இருந்த காரணத்தால் சுமார் 12 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து விழுந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விமானத்தை இயக்கிச்சென்ற இரண்டு விமானிகளும் விபத்தில் பலியாகியுள்ளனர்.

தலைநகர் காத்மாண்டுவில் இருந்து 500 கி.மீ தொலைவில் உள்ள பஹுங்ஹார் ஆற்றங் கரையில் விபத்துக்குள்ளான விமானத்தின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு; தூதர்களைத் திரும்ப பெற்றது பாலஸ்தீன அரசு!

அமெரிக்கா தனது புதிய தூதரகத்தை ஜெருசலேமில் திறந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குள்ள தூதர்களை திரும்பப் பெறுவதாக பாலஸ்தீன அரசு அறிவித்துள்ளது.

இஸ்ரேல் – பாலஸ்தீன் இடையே நீண்ட நெடுங் காலமாக மோதல்கள் நடந்து வருகின்றன. ஜெருசலேமை இஸ்ரேல் தனது தலைநகராகக் கருதி வந்தாலும், அதை உலக நாடுகள் அங்கீகரிக்கவில்லை. பாலஸ்தீன், கிழக்கு ஜெருசலேமை தனது எதிர்கால தலைநகர் என கருதி வந்தது.

கிறிஸ்தவர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் என 3 மதத்தினருக்கும் புனித நகரமாக திகழக்கூடிய ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்து கடந்த டிசெம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு வெளியிட்டார். அத்துடன் அங்கு அமெரிக்க தூதரகம் அமைக்கப்படும் எனவும் கூறினார்.

இந்த நிலையில், திட்டமிட்டபடி கடந்த வெவ்வாய்க்கிழமை ஜெருசலேமில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது. இந்த விழாவில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மகள் இவான்கா ட்ரம்ப், இவான்காவின் கணவர் ஜாரெட் குஷ்னர் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதற்கிடையே இஸ்ரேல் உருவாக்கப்பட்டதின் 70ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி, பாலஸ்தீனர்கள் காசா எல்லைப் பகுதியில் பெருமளவில் திரண்டு வந்து போராட்டங்களை நடத்தினர்.

போராட்டக்காரர்களை ஒடுக்கும் விதத்தில் இஸ்ரேல் படையினர் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 59 பாலஸ்தீனர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இது நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்தக்கொடூரதாக்குதலுக்கு உலக தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இதற்கிடையில், காசா தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து துருக்கி தனது நாட்டில் உள்ள இஸ்ரேல் தூதரை வெளியேற உத்தரவிட்டது. அதேபோல், இஸ்ரேல் அரசும் தனது நாட்டில் உள்ள துருக்கி தூதரை தற்காலிகமாக வெளியேற்றியது.

இந்த நிலையில், புதிய தூதரகத்தை ஜெருசலேமில் திறந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவில் உள்ள பாலஸ்தீன தூதரான குசாம் சோமால்டை திரும்ப வருமாறு பாலஸ்தீன ஜனாதிபதி மகமது அப்பாஸ் அறிவித்துள்ளார்.

கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆட்சி அமையும்; திட்டவட்டமாகக் கூறுகிறார் எடியூரப்பா!

பெங்களூர், மே 17

கர்நாடகத்தில் யார் ஆட்சி அமைக்கப்போகிறார்கள் என்பது உச்சகட்டப் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கும் நிலையில், பா.ஜ.க. ஆட்சி அமையும் என்று பா.ஜ.க. தலைவர் எடியூரப்பா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கர்நாடகத்தில் நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எந்த கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு 78 இடங்களும், பா.ஜ.கவுக்கு 104 இடங்களும், மதச்சார்பற்ற ஜனதா தளம், பகுஜன் சமாஜ் கூட்டணிக்கு 37 இடங்களும், இதர கட்சிகளுக்கு 3 இடங்களும் கிடைத்துள்ளன.

தனிப் பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்காத நிலையில், பா.ஜ.கவை ஆட்சியில் அமரவிடக்கூடாது என்று நோக்கில் மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சிக்கு முதல்வர் பதவியை விட்டுக் கொடுத்தது காங்கிரஸ் கட்சி.

காங்கிரஸ் கட்சியின் நிபந்தனையற்ற ஆதரவை மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியின் தலைவர்கள் ஜே.டி.எஸ். தலைவர்கள் எச்.டி.தேவகவுடா, அவரின் மகன் குமாரசாமி ஆகியோரும் ஏற்றுக்கொண்டனர்.

இதையடுத்து, காங்கிரஸ் தலைவர்களும், மதச்சார்பற்ற ஜனதா தளம் தலைவர்களும் நேற்று ஆளுநர் வாஜுபாய் வாலாவைச் சந்தித்து ஆட்சி அமைக்கக் கோரினார்கள். அதே சமயம், தனிப்பெரும் கட்சி என்ற ரீதியில் பா.ஜ.க வினர் ஆளுநரைச் சந்தித்து ஆட்சி அமைக்கும் உரிமை கோரினார்கள்.

இந்த நிலையில், பா.ஜ.கவின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் பெங்களூரில் அந்த கட்சியின் அலுவலகத்தில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் சட்டப்பேரவைக் குழுத் தலைவராக எடியூரப்பா தேர்வு செய்யப்பட்டார். அதன்பின் ஆளுநர் வாஜுபாய் வாலாவைச் சந்தித்து தன்னை ஆட்சி அமைக்கஅழைக்க வேண் டும் எனக் கோரிக் கடிதம் அளித்தார்.

அதன்பின் அங்கிருந்து வெளியே வந்த எடியூரப்பா நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

மாநிலத்தில் தனிப்பெரும் கட்சியாக பா.ஜ.க. இருப்பதால், என்னை முதல்வர் பதவி ஏற்க அனுமதிக்கவேண்டும் என்று கூறி ஆளுநரிடம் கடிதம் அளித்தோம். அதற்கு ஆளுநர் உரிய முடிவை விரைவாக எடுப்பேன் என்று உறுதியளித்துள்ளார்.

மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் எங்களுக்கு 100 சதவீதம் நம்பிக்கை இருக்கிறது. ஆளுநர் விரைவாக முடிவு எடுப்பார் என நம்புகிறோம் என்று டியூரப்பா தெரிவித்துள்ளார்.

வாரணாசியில் பாலம் இடிந்து விபத்து உயிரிழந்தோர் எண்ணிக்கை 18 ஆனது

லக்னோ, ம 17

உத்தரப்பிரதேசம் மாநிலம், வாரணாசி பகுதியில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்த பாலம் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

உத்தரப்பிரதேசம் மாநிலம், வாரணாசியில் உள்ள ராணுவ கண்டோன்மன்ட் பகுதியில் சாலை மேம்பாலத்துக்கான கட்டுமானப் பணிகள் நடை பெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை இந்த பாலத்தின் ஒரு பகுதி பயங்கரமாக இடிந்து விழுந்தது. இந்த இடிபாடுகளில் பாலத்தின் கீழ் பகுதியில் நின்றிருந்த பஸ், கார் உள்ளிட்ட வாகனங்கள் சிக்கி கொண்டன. மேலும், அவ்வழியாக நடந்து சென்றவர்களும் இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடினர்.

தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர் இடிபாடுகளை அகற்றிப் பலரை மீட்டு அம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். இந்தக் கோர விபத்தில் 12 பேர் பலி யானதாக முதல்கட்ட தகவல் வெளியாகின.

சம்பவ இடத்துக்கு 250 வீரர்களைக் கொண்ட தேசிய பேரிட மீட்புப் படையினரை அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த துயர சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசின் சார்பில் தலா 5 லட்சம் ரூபாய் இழப்பீடு மற்றும் படுகாயம் அடைந்தவர்களின் சிகிச்சை செலவுக்குத் தலா 2 லட்சம் ரூபா அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. 50 க்கும் மேற்பட டோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ள சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் மேலும் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

(க)

கோதாவரி ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து: காணாமல்போன 32 பேரை தேடும் பணி தீவிரம்

ஆந்திரா, மே 17

ஆந்திராவில் கோதாவரி ஆற்றில் மலைவாழ் மக்கள் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் காணாமல் போன 32 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வரு கிறது.

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டம் தேவிப்பட்டினத்திற்கு சந்தைக்காக அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மலைவாழ் மக்கள் படகில் சென்றுள்ளனர். அந்த படகில் மொத்தம் 57 பேர் இருந்தனர்.

இந்த நிலையில், தேவிப்பட்டினம் மண்டலம் மண்டூர் என்னும் இடத்தில் படகு சென்று கொண்டிருந்த போது திடீரெனச் சூறாவளி காற்றுடன் மழையும் பெய்தது .

பலத்த காற்றின் காரணமாகப் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மேல் பகுதியில் இருந்த 15 பேர் மட்டும் நீந்தியபடி கரைக்கு திரும்பி உள்ளனர். படகில் பயணம் செய்த மற்றவர்களின் நிலை தெரியாத நிலையில், கோதாவரி ஆறு 400 மீட்டர் அகலம் என்பதால் அதில் இருந்து ஒரு சிலர் தவிர மற்றவர்கள் இறந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போன 32 பேரைத் தேடும் பணியில் விஜயவாடா, விசாகப் பட்டினம், காக்கிநாடாவில் இருந்து தேசிய பேரிடர் , மாநில பேரிடர் மீட்புப் படையினர் 3 குழுக்களாகப் பிரிந்து 22 படகுகளில் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். படகு 150 அடி ஆழத்தில் முழ்கி இருக்கும் என்பதால் அதனை மேலே கொண்டு வரும் பணியும் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி மாவட்ட அதிகாரிகளும் பொலிசாரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

(க)

மேற்கு வங்காள தேர்தல் வன்முறை எதிரொலி; பலத்த பாதுகாப்புடன் மறுவாக்குப் பதிவு!

கொல்கத்தா, மே 17

மேற்கு வங்காளம் மாநில உள்ளாட்சி அமைப்பு தேர்தலில் பரவலாக வன்முறைச் சம்பவங்களால் வாக்குப்பதிவு நிறுத்தப்பட்ட 568 வாக்குச்சாவடிகளில் நேற்று மறுவாக்கு பதிவு நடைபெற்றது.

மேற்கு வங்காளத்தில் உள்ளாட்சி அமைப்பு தேர்தல் தொடங்குவதற்கு முன்பிருந்தே மாநிலத்தின் பல கிராம பகுதிகளில் அரசியல் கட்சியினரிடையே மோதல் வெடிக்கத் தொடங்கியது.

கடந்த திங்கள் கிழமை வாக்குப்பதிவின்போதும் வன்முறை தொடர்ந்தது. வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றியது, பொது மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்தது, வெடிகுண்டு தாக்குதல் போன்றவை அரங்கேறின. மாநிலம் முழுதும் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில் 12 பேர் உயிரிழந்தனர் மற்றும் 43 பேர் படுகாயம் அடைந் தனர்.

வன்முறை தொடர்பாக சுயேட்சை வேட்பாளர்கள் மாநில தேர்தல் ஆணையத்தில் பல்வேறு புகார்களை அடுக்கினர். இதைத்தொடர்ந்து மறுவாக்குப்பதிவு நடத்த முடிவு செய்யப்பட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட வாக்குச்சாவடிகளுக்கு பலத்த பாதுகாப்புடன் மறுவாக்குப் பதிவு நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்தது.

அதன் அடிப்படையில், ஹுக்ளி மாவட்டத்தில் 10 வாக்குச்சாவடிகள், மேற்கு மிட்னாபூர் மாவட்டத்தில் 28 வாக்குச்சாவடிகள், கூச் பெஹார் மாவட்டத்தில் 52 வாக்குச்சாவடிகள், முர்ஷி தாபாத் மாவட்டத்தில் 63 வாக்குச்சாவடிகள், நாடியா மாவட்டத்தில் 60 வாக்குச்சாவடிகள், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் 59 வாக்குச்சாவடிகள், தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் 26 வாக்குச்சாவடிகள், மால்டா மாவட்டத்தில் 55 வாக்குச்சாவடிகள், உத்தர் தினஜ்பூர் மாவட்டத்தில் 73 வாக்குச்சாவடிகள் என மொத்தம் 568 வாக்குச்சாவடிகளில் நேற்று மறுவாக்குப்பதிவு நடைபெற்றது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மே 18...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மே 18ஆம் திகதி விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை நினைவு கூர்ந்து படையினரைக் கௌரவிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தினத்தில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக வடக்கில் நினைவு தினம் அனுஷ்டிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகச் செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"ஜே.வி.பியினரும் இவ்வாறான தினத்தை அனுஷ்டிக்கின்றனர். இதேபோன்றே வடக்கில் போரின்போது இறந்த தமது சகோதரர்கள் உள்ளிட்ட உறவுகளை நினைவு கூர்ந்தே வடக்கிலுள்ள தமிழ் மக்கள் இவ்வாறான ஒரு தினத்தை அனுஷ்டிக்கின்றனர். இதில் எந்தவித தவறும் இல்லை. அங்குள்ள மக்களும் எமது மக்களே" என்றும்அமைச்சர்சுட்டிக்காட்டினார்.

விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு . இந்த அமைப்பு தோற்கடிக்கப்பட்ட தினமே இவ்வாறு அனுஷ்டிக்கப்படுகின்றது. இதனை அரசு அங்கீகரிக்கின்றதா? என்று அந்தச் செய்தியாளர் மேலும் கேள்வி எழுப்பியபோது,

''வடக்கிலுள்ள தமிழர், உறவுகளை இழந்தவர்களே இந்தத் தினத்தை அனுஷ்டிக்கின்றனர். ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளைப்போன்றே பயங்கரவாதச்செயற்பாடுகளில் ஈடுபட்டனர். அவர்களும் இறந்தவர்களை இன்று நினைவு கூர்ந்து இவ்வாறு நினைவேந்தல் தினத்தை அனுஷ்டித்து வருகின்றனர். இதேபோன்றே வடக்கு மக்களும் அனுஷ்டித்து வருகின்றனர்.

வடக்கு மக்களை வேறு பிரதேச மக்களாகப் பிரித்துப் பார்க்கக்கூடாது.அவர்களுக்கும் தமது உறவுகளின் இழப்புகள் தொடர்பில் உணர்வுகள் உள்ளன.போரின்போது எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதிகள் இறந்ததில்லை.பொதுமக்களும் இறந்ததுண்டு. அதுபோல்தான் இங்கும். வடக்குமக்கள் இதனை அனுஷ்டிப்பதாலேயே உங்களுக்குப் பிரச்சினை இருப்பதாகத் தெரிகின்றது. இது தவறானது" என்று அமைச்சர் ராஜித பதிலளித்தார். (ஐ)

தீபமேந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீபமேந்திய ஊர்தி நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்டது.

வல்வெட்டித்துறை மண்ணிலிருந்து நேற்று முன்தினம் மு.ப 10.30 மணிக்குப் பவனியை ஆரம்பித்த ஊர்தி நேற்றுக் காலை 9 மணியளவில் நல்லூரை வந்தடைந்தது.

இளைஞர்களால் ஒழுங்கமைத்து நடத்தப்படும் தீப ஊர்திப் பவனி வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் பவனி சென்று மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தைச் சென்றடைகின்றது.

தமிழினப் படுகொலையில் உயிர்நீத்த மக்களுக்கு இந்த ஊர்தியில் அஞ்சலி செலுத்துமாறு தாயக மக்களிடம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-7)

ஆட்கொணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகள் கடந்த சம்பவத்தை இந்த நீதிமன்றில் விசாரிக்க முடியாது. எனவே ஆரம்ப விசாரணையிலே இந்த மனுக்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்."

இவ்வாறு இராணுவ அதிகாரி துமிந்த கெப்பிட்டிவெலான சார்பில் மன்றில் முன்னிலையான சட்டமா அதிபர் திணைக்களப் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர ஆட்சேபனை விண்ணப்பம் செய்தார்.

"குற்றச் சம்பவம் நடைபெற்றதாக மனுதாரரால் குறிப்பிடப்படும் காலப் பகுதியிலிருந்து 22 ஆண்டுகளின் பின் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே இவை காலம் கடந்தவை.

மனுவில்வ-3 என இணைக்கப்பட்டுள்ள சான்று ஆவணம் போலியானது. உயர் நீதிமன்ற விதிகளின்படி மூலப் பிரதி இணைக்கப்படவேண்டும். ஆனால் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டுள்ள ஆவணத்தின் நிழல் பிரதியே இணைக்கப்பட்டுள்ளது. அதனை அத்தாட்சிப்படுத்தவும் மனுதாரர் தவறிவிட்டார். எனவே அந்த ஆவணத்தைப் போலி ஆவணமாக இந்த மன்றுக்குச் சுட்டிக்காட்டுகின்றேன்.

இராணுவத்தினாரால் கைது செய்யப்பட்ட இடத்தை மட்டுமே மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் கைது செய்யப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்ட இடங்களை மனுதாரர்கள் குறிப்பிடவில்லை. எனவே இந்த மனுக்களை விசாரணை நடத்தும் நியாயதிக்கம் இந்த நீதிமன்றுக்கு இல்லை" என்று சட்டமா அதிபர் திணைக்களப் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர ஆட்சேபனை விண்ணப்பம் செய்தார்.

ஆட்கொணர்வு மனுக்களின் பிரதிவாதிகள் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைக்கு மனுதாரர்கள் பதில் ஆட்சேபனையை மன்றில் முன்வைக்க எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி தவணையிடப்பட்டு வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டன.

1996ஆம் ஆண்டு நாவற்குழிப் படைமுகாமில் இராணுவ அதிகாரியாகவிருந்த துமிந்த கெப்பிட்டிவெலான தலைமையிலான படையினர் கைது செய்துகொண்டு சென்ற 24 இளைஞர்கள் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

தமது உறவினர்களை மீட்டுத் தருமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் சட்டத்தரணிகள் கு.குருபரன் மற்றும் எஸ்.சுபாசினி ஆகியோர் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் கடந்த நவம்பர் 9ஆம் திகதி 12 பேர் சார்பில் தனித்தனியே ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 3 மனுக்களை மட்டும் மேல் நீதிமன்று ஏற்றுக்கொண்டது.

9 பேரின் மனுக்கள் 2002 ஆம் ஆண்டு யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்குகளை யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடாது என அப்போதைய யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் 2003ஆம் ஆண்டு தாக்கல் செய்த மனுவை அடுத்து , இந்த வழக்குகள் அக்காலப் பகுதியில் அனுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு மாற்றம் செய்யப்பட்டன.

வேறொரு மேல் நீதிமன்றில் நிலுவையில் இருக்கும் வழக்கொன்றை இன்னொரு மேல் நீதிமன்றில் மீளத் திறக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய யாழ்.மேல் .நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், 9 பேரின் ஆட்கொணர்வு மனுக்களைத் தள்ளுபடி செய்திருந்தார்.

மனுக்களில் முதலாம் பிரதிவாதியாக துமிந்த கெப்பிட்டிவெலான, 2ஆம் பிரதிவாதியாக இலங்கை இராணுவத் தளபதி மற்றும் 3ஆம் பிரதிவாதியாகச் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

சட்டமா அதிபர் திணைக்கள பிரதி சொலிசிட்டர் ஜெனரல் செய்த்திய குணசேகர மேல் நீதிமன்றில் தோன்றினார். அவர்களுடன் அரச சட்டவாதிகள் நாகரட்ணம் நிஷாந்த்தும் முன் னிலையாகினர்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத் தரணிகள் வி.திருக்குமரன், எஸ்.சுபாசினி ஆகியோர் முன்னிலையாகினர். (ஐ-7)

போர்க்குற்றங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் மார்ல் பெரேரா தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன் தினம் நடந்த, படையினரை நினைவு கூரும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போர்க்காலம் என்பது, இயல்பான நேரம் அல்ல. போர் மனிதாபிமானம் அற்றது. அது வாழ்வுக்கும் சாவுக்கும் இடையிலான போராட்டம். போர்க்காலத்தில் சட்டம் அமைதியாகிவிடும்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து தாய்நாட்டைக் காப்பாற்றுவதற்காகப் போரிட்ட இலங்கைப் படையினர் எந்தக் குற்றங்களை இழைத்திருந்தாலும், அவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்படவேண்டும்.

போரின் இறுதிக்கட்டத்தில் குற்றங்களை இழைத்தார்கள் என்று எமது படையினருக்கு எதிராக அநியாயமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவை அடிப்படை ஆதாரமற்ற பொய்கள். பல பொதுமக்களை இலங்கைப் படையினர் காப்பாற்றியுள்ளனர்.

போர்க்காலத்தில் நடந்த குற்றங்களுக்காக, எந்தவொரு நாடும் சட்ட நடவடிக்கை எடுத்ததில்லை.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் இரண்டு நகரங்களான ஹிரோஷிமாவும், நாகசாகியும் முற்றாக அழிக்கப்பட்டன. அதற்குக் காரணமான குற்றவாளிகள் மீது யாரும் எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. – என்றார். (ஐ)

மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் புதன்கிழமை காலை மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பமாகின. இதன்போதே மேற்படி எச்சங்கள் மீட்கப்பட்டன. இதனையடுத்து அகழ்வுப் பணி இன்றும் தொடரவுள்ளது.

மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்து உடைக்கப்பட்டுப் புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் 'சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்வு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட மண்ணில் மனித எலும்புகள் காணப்பட்டன.

'சதொச' விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மண் மன்னாரில் பல இடங்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மன்னார் எமில் நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கொட்டப்பட்ட மண்ணில் மனித எலும்புகள் காணப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட நிலையில் அந்த வீட்டின் உரிமையாளர் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையில் மன்னார் பொலிஸார் குறித்த வீட்டுக்குச் சென்று கொட்டப்பட்ட மண்ணைப் பார்வையிட்டதோடு, மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் மார்ச் மாதம் 27 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் மன்னார் நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா மற்றும் விசேட சட்ட வைத்திய நிபுணர் ஆகியோர் முன்னிலையில் கொட்டப்பட்ட மற்றும் வீட்டு வளாகத்தினுள் பரவப்பட்ட மண்ணில் இருந்து சந்தேகத்திற்கிடமான எலும்புத்துண்டுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகர நுழைவாயிலில் அமைந்திருந்து உடைக்கப்பட்டுப் புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த 'சதொச' விற்பனை நிலையக் கட்டட நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் மண் அகழ்வு செய்யப்பட்டு மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்ட 'லங்காசதொச கட்டடப் பகுதிக்கு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா மற்றும் விசேட சட்ட வைத்திய நிபுணர், விசேட தடயவியல் நிபுணத்துவப் பொலிஸார் ஆகியோர் சென்று பார்வையிட்டதோடு, நேற்றுப் புதன்கிழமை காலை 8 மணியளவில் மன்னார் நீதிவான் முன்னிலையில் அகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது மேலும் பல மனித எலும்புத்துண்டுகள் மீட்கப்பட்டன. உடைக்கப்பட்ட அந்தக் கட்டடப் பகுதியில் அதிகளவான நீர் காணப்பட்டமையால் நீர் வெளியேற்றப்பட்ட நிலையில் நீதிவான் பார்வையிட்டு அகழ்வுகள் இடம்பெற்றன.

எனினும் பல மனித எச்சங்கள் அங்கு மீட்கப்பட்ட நிலையில் நேற்று முற்பகல் 9.20 மணியளவில் அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டன. தற்போது அந்தப் பகுதிக்குப் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.மீண்டும் அகழ்வுப்பணி இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ளது.(ஐ)

வடக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் அனைவரும் அகவணக்கம் செலுத்துமாறும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த எழுபதாண்டு காலமாக எமது தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத ரீதியிலும் நாம் போராடி வந்துள்ளோம். எமது ஆயுதப் போராட்டம் பயங்கரவாதமாகச் சித்திரிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி சர்வதேச சமூகத்தைப் பழியாக வழிநடத்தி மௌனிக்கச் செய்யப்பட்டது.

கடந்த முப்பதாண்டு போராட்டத்தில் நாம் ஏராளமான இளையோர்களை உள்ளிட்ட இலட்சக்கணக்கான உயிர்களைக் களப்பலி கொடுத்துள்ளோம். குறிப்பாக இறுதியாக எமது மக்கள் மீது நடைபெற்ற தாக்குதலில் பல்லாயிரக்கான உயிர்களை இழந்துள்ளதுடன் பல்லாயிரக் கணக்கனக்கானோருக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளோம்.

இந்த நிலையில் எமது இனத்தின் உரிமைக்குரலுக்கான போராட்டம் இன்.. .மும் முற்றுப்பெறவில்லை என்பதையும், மடிந்துபோன எமது உறவுகளுக்கும் காணாமல் ஆக்கப்பட்டஉறவுகளுக்கும் இன்னமும் நீதி வழங்கப்படவில்லை என்பதையும் சர்வதேச சமூகத்துக்கு அழுத்தமாக எடுத்துரைக்க வேண்டியுள்ளது.

மேலும், எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான வேள்வியில் ஆகுதியானவர்களை உணர்வுடன் நினைவு கூர வேண்டியது எம்மினத்தின் கடமையாகும்.

எனவே, எமது மக்களின் அபிலாஷைகளை உயர்த்திப் பிடிக்கும் நிறுவனமாக வடக்கு மாகாண சபை திகழ்வதால், எமது மாகாணத்தின் அனைத்துப் பாடசாலைகளும் நாளை வெள்ளிக்கிழமை வடக்கு மாகாணசபையின் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுமாறும் அன்று காலை பதினொரு மணிக்கு அனைத்துப் பாடசாலைகளிலும் அனைவரும் அகவணக்கம் செலுத்துமாறும் அனைத்து அதிபர்களையும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.- என்றுள்ளது. (ஐ-7)

விவசாயியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தை சின்னக்குளத்தைச் சேர்ந்த இராசன் (வயது - 51) என்ற விவசாயியே உயிரிழந்தார்.

வவுனியாச் சந்தையில் தனது விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொடுத்துவிட்டு அவர் சைக்கிளில் வீடு திரும்பியபோது, யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஹன்டர் ரக வாகனம் பின்புறமாகச் சென்று விவசாயியை மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

சம்பவத்தையடுத்து ஹன்டர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார். (ஐ)

பிரேசில் குழாமில் நெய்மர்

ரஷ்யாவில் அடுத்த மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டத்துக்கான பிரேஸிலியக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள 23 பேர் கொண்ட குழாமில், இவ்வாண்டு பெப்ரவரி 25ஆம் திகதி காயமடைந்ததைத் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்காத பிரெஞ்சு லீக் 1 கழகமான பாரிஸ் சென் ஜெர்மைனின் முன்கள வீரரான நெய்மரும் இடம்பெற்றுள்ள நிலையில், அடுத்த மாத ஆரம்பத்தில் நெய்மர் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான உடற்றகுதியையடைந்து விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, பாரிஸ் சென் ஜெர்மைனின் வலது பின்கள வீரர் டனி அல்விஸ் முழங்கால் காயமொன்று காரணமாக உலகக் கிண்ணத்தில் பங்குகொள்ள முடியாமல் போயுள்ள நிலையில், பிரேஸிலியக் கழகமான கொரிந்தியன்ஸின் வலது பின்கள வீரர் பக்னர், இங்கிலாந்து பிறீமியர் லீக் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றியின் வலது பின்கள வீரரான டனிலோவால் அவர் பிரதியீடு செய்யப்பட்டுள்ளார்.

இதுதவிர, காயத்திலிருந்து அண்மையிலேயே குணமடைந்த ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் பின்கள வீரரான பிலிப் லூயிஸும் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

அந்தவகையில், எதிர்பார்க்கப்பட்ட வீரர்களே குழாமில் இடம்பெற்றுள்ள நிலையில், கடந்த காலங்களில் பிரகாசித்த டேவிட் லூயிஸ், றமாரிஸ், ஒஸ்கர், ஹல்க், அலெக்ஸ் ஸான்ட்ரோ உள்ளிட்ட வீரர்கள் குழாமில் இடம்பெறவில்லை.

தனது முதலாவது போட்டியில் அடுத்த மாதம் 17ஆம் திகதி சுவிற்ஸர்லாந்தை பிரேஸில் எதிர்கொள்கிறது.

குழாம்:

கோல் காப்பாளர்கள்: அலிஸன், எடெர்ஸன், களியோ.

பின்கள வீரர்கள்: டனிலோ, பக்னர், மார்ஷெல்லோ, பிலிப்பி லூயிஸ், மிராண்டா, மார்க்குயின்ஹொஸ், தியாகோ சில்வா, ஜெரோமெல்.

மத்தியகள வீரர்கள்: கசேமீரோ, பெர்ணாண்டின்ஹோ, போலின்ஹோ, றெனட்டோ அகஸ்டோ, பிரட், பிலிப் கோச்சினியோ, வில்லியன்.

முன்கள வீரர்கள்: நெய்மர், கப்ரியல் ஜெஸுஸ், றொபேர்ட்டோ பெர்மினோ, டக்ளஸ் கொஸ்டா, டைஸன்.

இந்தியாவையே எதிர்க்கின்றோம் கோஹ்லியை அல்ல

இந்திய அணிக்கு எதிராகவே நாங்கள் விளையாடுகின்றோம், கோஹ்லிக்கு எதிராக விளையாடவில்லை என ஆப்கானிஸ்தான் அணியின் தலைவர் அஸ்ஹர் ஸ்டெனிக்சாய் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்தைப் பெற்ற ஆப்கானிஸ்தான் வரலாற்றுச் சிறப்பு மிக்க முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியுடன் பலப்பரீட்சையில் ஈடுபடவுள்ளது.

எனினும் இங்கிலாந்தில் நடைபெறும் கௌண்டி போட்டிகளில் விளையாடுவதன் காரணமாக ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கோஹ்லி விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அஸ்ஹர் ஸ்டெனிக்சாய் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில்-

இந்திய அணியைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு வீரரும் விராட் கோஹ்லியைப் போன்றவர்களே, அனைவருமே சிறந்த வீரர்கள்.

இந்திய சூழல் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமானதாக அமைந்துள்ளது. அதிஸ்டவசமாக நாங்கள் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களைப் பெற்றுள்ளோம். அது மட்டுமல்ல சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் எம்மிடம் உள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் எங்கள் அணியின் ஆட்டம் சிறப்பானதான காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இந்தியாவிற்கு எதிரான போட்டியில் எமது திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற முயற்சி செய்வோம். - என்றார்.

இந்திய தலைமையின் கீழ் மீண்டும் ஐ.சி.சி. நிர்வாகம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தலைவராக இந்தியக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவரான சாங் மனோகர் இரண்டாவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்வேறு சீர்திருத்தங்களை முன்னின்று நடத்தியவர் என்றவகையில் அவரை, சபை முன்மொழிந்ததில் போட்டியின்றித் தெரிவாகியுள்ளார்.

இந்தப் பதவிக்கான தெரிவு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது. அந்தவகையில் தற்போது பதவியில் இருந்த மனோகரே இரண்டாவது தடவையாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் 104 நாடுகளுக்கு ரி 20 அந்தஸ்து வழங்கியது நினைவிருக்கலாம். அதே நேரத்தில் அடுத்த வருடத்திலிருந்து டெஸ்ட் சம்பியன்ஷிப்பை நடத்துவதில் ஐ.சி.சி முனைப்புக் காட்டி வருவது டெஸ்ட் போட்டிகள் இன்னும் கொஞ்சம் காலம் வாழ வழிவகுக்கும்.

ஒவ்வொரு நாட்டிலும் ஐ.பி.எல் போன்ற பிரான்சைசி கிரிக்கெட் பரவலாகிவரும் வேளையில் அதனைக் கட்டுப்படுத்தி சர்வதேச அளவில் மீண்டும் கிரிக்கெட்டை பரவலாக்க வேண்டும் என்பதே மனோகரின் குறிக்கோளாக இருக்கும் என்று குறிப்பிடப்படுகிறது.

மட்டக்களப்பு முதலிடம்

கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்கான பெண்களுக்கான எல்லே போட்டியில் நான்காவது தடவையாகவும் மட்டக்களப்பு மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாகப் போட்டியிட்ட ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவு அணி முதல் இடத்தினைப் பெற்றது.

இரண்டாம் இடத்தினை திருகோணமலை மாவட்ட அணி பெற்றுக்கொண்டது.

44 ஆவது தேசிய விளையாட்டு விழாவிற்கு முன்னோடியாக நடைபெறும் இந்த மாகாண மட்டப் போட்டிகள் திருகோணமலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ரஹானேக்கு 30 இலட்சம் அபராதம்

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் தாமதமாக பந்து வீசியமை காரணமாக ராஜஸ்தான் அணி தலைவர் அஜிங்கிய ரஹானேக்கு 30 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்தப்போட்டியின் போது 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை ராஜஸ்தான் அணி வெற்றி கொண்டதன் மூலம் அவர்களின் பிளேஒப் கனவு தகர்த்தியிருந்தது.

இந்தப் போட்டியின் போது பந்துவீச அதிக நேரம் எடுத்துக் கொண்டமையினால், போட்டியின் நடுவர்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

Royal Challengers Bangalore v Sunrisers Hyderabad

இன்று
17.05.2018
இரவு 8.00 மணி

கூட்டமைப்பின் வேட்பாளருக்கு முன்னணியால் அச்சுறுத்தலாம்

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மே 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குப் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவருக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி.தெற்குப் பிரதேச சபைக்கு ஏழாலை வட்டாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேலாயுதம் செல்வகாந்தன் போட்டியிட்ட நிலையில், அதே வட்டாரத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாகப் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரே வெற்றி பெற்றிருந்தார்.

இருவரும் விளையாட்டுக் கழகம் ஒன்றில் நிர்வாக உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் கழகத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகப் புலம்பெயர் நலன் விரும்பிகளால் ஒரு தொகைப் பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணம் கழக அபிவிருத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் கழக விதிகளை மீறித் தன்னிச்சையாக மக்களுக்கு வாழ்வாதார உதவி என்ற பெயரில் அதனைப் பகிர்ந்தளித்துள்ளார் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து செல்வகாந்தன் இந்த விடயத்தை முகநூலில் பதிவு செய்து புலம்பெயர் நலன்விரும்பிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினரின் ஆதரவாளர்கள் முகநூலில் செல்வகாந்தனுடன் முரண்பட்டுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக நேற்று முன் தினம் இரவு அவரது வீட்டுக்கு ஓட்டோவில் சென்ற நான்குக்கும் மேற்பட்டோர் செல்வகாந்தனை அச்சுறுத்தித் தாக்க முற்பட்டுள்ளர். இதன்போது வீட்டிலிருந்தவர்கள் சத்தமிட்டமையைத் தொடர்ந்து தாக்குதல் நடத்த வந்தவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் செல்வகாந்தனால் நேற்று முன் தினம் இரவு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அச்சுறுத்தியவர்களைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-7)

போதையில் வாகனம் ஓடிய பெண் மீது குற்றப்பத்திரம்

யாழ்ப்பாணம் , மே 17

மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்து விபத்துக்குள்ளான இளம் பெண்கள் இருவரில் ஒருவர் மீது மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்திலுள்ள நீதிமன்றில் முற்படுத்தப்படும் முதலாவது பெண் இவர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.இருபாலைச் சந்திப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நகர் நோக்கி பிளசர் ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் பெண்கள் இருவர் கட்டைப் பிராய் சந்திக்கு அருகில் விபத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

விபத்துக்கு உள்ளானவர்களை வீதியில் சென்றவர்கள் மீட்டபோது, அவர்கள் இருவரும் போதையில் நிலைதடுமாறியநிலையில் இருந்தமையால் அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஊடாகப் பெண்கள் இருவரையும் அவ்விடத்தில் இருந்து மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சிகிச்சை பெற்ற அவர்கள் இருவரும் வைத்தியசாலையிலிருந்து நேற்று வெளியேறினர். அவர்களில் மோட்டார் சைக்கிளைச்செலுத்திவந்தபெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

23,24 வயதுகளையுடைய பெண்கள் இருவரும்மானிப்பாய்பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மதுபோதையில்வாகனத்தைச் செலுத்தினார் என்றகுற்றச்சாட்டில் பெண் ஒருவர் மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் எனக் கோப்பாய் பொலிஸார் கூறினர். (ஐ)

தனியார் பஸ் சேவையினரின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, மே 17

தனியார் பஸ் உரிமையாளர்களால் நாடு முழுவதும் நேற்று நள்ளிரவு முதல் முன்னெடுக்கப்படவிருந்த சேவைப் புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பஸ் சேவைகளின் ஆகக் குறைந்த கட்டணமாக 12 ரூபாவை நிர்ணயிப்பதுடன், 12.5 சதவீதக் கட்டண அதிகரிப்புக்கு அனுமதியளிப்பதாக அரசு வழங்கிய உறுதிமொழியையடுத்தே இந்த அறிவிப்பைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள் நேற்று மாலை விடுத்தன.

இந்தப் புதிய கட்டண அதிகரிப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டீசலின் விலை அதிகரிப்பையடுத்து பஸ் கட்டணங்களை 6.56 சதவீத்ததால் அதிகரிக்க அமைச்சரவை நேற்று முன் தினம் அனுமதியளித்தது. அதனடிப்படையில் அரச பஸ் சேவைகளின் கட்டணம் நேற்று அதிகரிக்கப்பட்டது.

எனினும் இந்த அதிகரிப்பு போதாது எனத் தெரிவித்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் நேற்று நள்ளிரவு முதல் தொடர் சேவைப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஊர்காவற்றுறைக் கர்ப்பிணிப் பெண் கொலை: சகோதரர்கள் இருவரும் பிணையில் விடுவிப்பு

ஊர்காவற்றுறைக் கர்ப்பிணிப் பெண் கொலை வழக்கில் சுமார் 17 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் இருவரையும் நிபந்தனையுடனான பிணையில் விடுவிக்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுக் கட்டளை வழங்கியது.

ஊர்காவற்துறைப் பகுதியில் 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஒரு பிள்ளையின் தாயும் ஏழு மாதக் கர்ப்பிணியுமான ஞானசேகரன் ஹம்சிகா (வயது-27) என்பவர் கொலை செய்யபட்டார்.

கொலைச் சம்பவம் தொடர்பில் சகோதர்களான இருவர் அன்றைய தினம் மாலை மண்டைதீவு சந்தியில் உள்ள ஊர்காவற்றுறை பொலிஸாரின் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் அன்றைய தினத்திலிருந்து சுமார் 17 மாதங்களாகத் தொடர்ச்சியாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களுக்குப் பிணை கோரி அவர்களின் தாயார், சட்டத்தரணி வி.திருக்குமரன் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

பிணை விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், சந்தேகநபர்கள் இருவருக்கும் நிபந்தனையுடனான பிணை வழங்கி நேற்றுக் கட்டளை வழங்கினார்.

சந்தேகநபர்கள் ஒவ்வொருவரும் ஒரு லட்சம் ரூபா பணத்தை வைப்புச் செய்யவேண்டும். சந்தேகநபர்கள் ஒவ்வொருவரும் 5 லட்சம் பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளை நீதிமன்றில் முன்னிறுத்த வேண்டும். மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும். வெளிநாடு செல்லத் தடை என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் கட்டளை வழங்கினார். (ஐ-7)

ஆளுநரின் இணைப்புச் செயலராக சுந்தரம் டிவகலாலா பதவியேற்பு

வடமாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளராக சுந்தரம் டிவகலாலா நேற்றுக் காலை நியமிக்கப்பட்டார். அவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் றெஜினோல்ட் குரே வழங்கினார்.

இதுவரை காலமும் இணைப்புச் செயலாளராகக் கடமை ஆற்றிய சுமணபால ஓய்வுபெற்றுச் சென்ற நிலையில் இணைப்புச் செயலாளராகத் தமிழரான சுந்தரம் டிவகலாலா நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-7)

முழங்காவில் மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர்

அரசு நடவடிக்கை

கொழும்பு, மே 17

கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் நீர் விநியோகத் திட்டத்தின் மூலம் முழங்காவில் பிரதேசத்தில் வாழும் மக்களுக்குப் பாதுகாப்பான, சுத்தமான குடிதண்ணீர் வழங்க அரசு எதிர்பார்த்துள்ளது.

இந்த நீர் விநியோகத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் கொள்முதல் குழுவின் சிபாரிசுக்கு அமையவாக 60 கோடி 85 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

திருநெல்வேலி தேனு களஞ்சியத்தின் பரிசுமழையில் வெற்றிபெற்றோர் விவரம்

எமது நிறுவனமான தேனு சுப்பர் மார்ட்டில் நேற்று இடம்பெற்ற குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள்.

முதலாம் பரிசு:
P.திரிபுரசோதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

இரண்டாம் பரிசு:
A.கஜித்தா
அரசடி பிள்ளையார் வீதி, நல்லூர்.

மூன்றாம் பரிசு:
R.கமலேஸ்வரி
அழகியவான் தோட்டம், திருநெல்வேலி.

எதிர்வரும் (20.05.2018) ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு பரிசளிப்பு இடம்பெறும். அத்துடன் ஆறுதல் பரிசாக அன்றைய தினம் 50 சிறுவர்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கப்படும். இந் நிகழ்வில் அனைத்து வாடிக்கையார்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தேனு சுப்பர் மார்ட்

இல.50, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

மேற்படி எமது கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் (Dec - 2017) முழுமையாக சித்தியடையாத மாணவர்களுக்காக **13 வருட உத்தரவாத கல்வித் திட்டத்தின் கீழ் கல்விப் பொதுத் தராதர தொழிற்துறைக் கல்வி ஆரம்பிக்கப்படவுள்ளது** என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இது தொடர்பான கலந்துரையாடல் இன்று (17.05.2018) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு எமது கல்லூரியில் நடைபெறவுள்ளது. அக்கல்வித் திட்டத்தில் உங்கள் பிள்ளைகளை இணைத்து பட்டதாரி ஆக்கி, அவர்களின் வாழ்வு வளம்பெற இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(C/101) அதிபர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற் லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 6728 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது